பக்கங்கள் : பத்து

உதயன்

Registered as a News

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 மாசி 04 சனிக்கிழமை (16.02.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 82

நூலகத்துறைப் படிப்பகம் மாநகர சபை, யாழ்ப்பாணம்

ஐ.தே.க., ஜே.வி.பி. கருத்துக்களையும் உள்வாங்கிய தீர்வு யோசனையே தேவை

அமைச்சர் விதாரணவுக்கு அரசு பணிப்பு

கொழும்பு, பெப்ரவரி 16

''இனப்பிரச்சினைத் தீர்வுக்காக தென்னிலங்கையின் யோசனைத் திட்டம் ஒன்றை சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழு முன்வைப்பதானால் அது ஜே.வி.பி.மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி ஆகியவற்றின் கருத்துகளையும் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும். அப்படி இல்லாத யோசனைத் திட்டம் ஒன்றைக் கொண்டுவராதீர்கள். ஆகவே, ஐ.தே.கட்சி மற்றும் ஜே.வி.பி. ஆகியவற்றின் கருத்துகளையும் உள்வாங்குவதற்கான முயற்சிகளில் தீவிரமாக ஈடுபடுங்கள்.''

- இவ்வாறு அரசுத் தலைமை, சர்வ கட்சிப் பிரதிநிதிகள் குழுவின் தலைவரும் அமைச்சருமான பேராசிரியர் திஸ்ஸ விதாரணவுக்கு வழிகாட்டுதல் வழங்கியிருப்பதாக நம்பகரமாக அறிய வருகின்றது.

இனப்பிரச்சினைத் தீர்வுக்கான உடனடிச் செயற்பாடு என்ற பெயரில், அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழு அளவில் நடைமுறைப் படுத்தக் கோரும் யோசனைத் திட்டம் ஒன்றை சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவிடமிருந்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பெற்றுக் கொண்டுள்ளார்.

இந்த நிலையில் சர்வகட்சிக் குழுவின் இறுதி யோசனை வடிவம் விரைவில் வெளிவரும் என்று அறிவித்து, அதற்கான ஆரவார ஏற்பாடுகளிலும் முயற்சிகளிலும் சர்வ கட்சிப் பிரதிநிதிகள் குழுவின் தலைவர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண ஈடுபட்டு வருகின்றார்.

இந்நிலையிலேயே, அவரை அரசுத் தலைமை அழைத்து இது குறித்து விரிவாகப் பேசியிருப்பதாக அறிய வருகின்றது.

அச்சமயம், அவருக்கு அரசுத் தலைமையால் அளிக்கப்பட்ட விளக்கம் மற்றும் அறிவுறுத்தல்கள், வழிகாட்டுதல்கள் ஆகியன குறித்து விடயமறிந்த வட்டாரங்கள் தகவல் வெளியிட்டிருக்கின்றன.

''பிரதான எதிர்க்கட்சிகளான ஜே.வி.பி., ஐ.தே.கட்சி போன்றவற்றின் கருத்துகள் உள்வாங்கப்படாத எந்தத் திட்டமும் தென்னிலங்கையின் இணக்கப்பாடாகக் கொள்ள முடியாதது.

(10 ஆம் பக்கம் பார்க்க)

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரனின் 45ஆம் நாள் நினைவு அஞ்சலி நிகழ்வுகள் பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்தில் நேற்று இடம்பெற்றன. பிரமுகர்களுடன் மகேஸ்வரன் குடும்பத்தினர் அஞ்சலி செலுத்தும்போது எடுக்கப்பட்ட படம்.

ஸ்ரீபதியின் விபத்து மரணத்தில் சந்தேகம் பாரபட்சமற்ற விசாரணைகள் அவசியம்

பொலிஸ்மா அதிபருக்கு மனைவி கடிதம்

கொழும்பு, பெப். 16

முன்னாள் அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஸ்ரீபதி சூரியாராய்ச்சி கார் விபத்து தொடர்பாக பாரபட்சமற்ற முறையில் விசாரணைகளை நடத்துமாறு அவரது மனைவி தில்ருக்ஷி சூரியாராய்ச்சி பொலிஸ்மா அதிபரிடம் கேட்டிருக்கிறார்.

இது தொடர்பாக அவர் பொலிஸ்மா அதிபர் விக்டர் பெரேராவிற்கு கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார். அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

கடந்த காலங்களில் இடம் பெற்ற அரசியல் பழிவாங்கல்களின் காரணமாகவும் அதன் தொடர்ச்சியாகவுமே ஸ்ரீபதி சூரியாராய்ச்சியின் மரணம் ஏற்பட்டிருக்கலாம் என்ற சந்தேகம் குடும்ப உறவினர்கள் மற்றும் நண்பர்கள் மத்தியில் வலுப்பெற்றிருக்கிறது.

இவ்வாறான நிலையில் ஸ்ரீபதிக்கு மரணத்தை ஏற்படுத்திய கார் விபத்து தொடர்பாக பிரதேச மட்டத்தில் நடத்தப்படுகின்ற பொலிஸ் விசாரணைகளில் தமக்கு நம்பிக்கை இல்லை என்ற காரணத்தினால் பாரபட்சமற்ற விசாரணைகளை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்று அந்தக்கடிதத்தில் கேட்டிருக்கிறார். (சி)

வடக்கு மாகாண ஆளுநராக சங்கரியா? தமக்கு எதுவுமே தெரியாது என்கிறார் அவர்!

கொழும்பு, பெப். 16

வடக்கிற்கான ஆளுநர் பதவியை ஏற்குமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முன்னர் தன்னைக் கேட்டுக்கொண்டுள்ள போதிலும் அது தொடர்பாகத் தான் இது வரை எந்த முடிவையும் எடுக்கவில்லை என்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ. ஆனந்தசங்கரி நேற்றுத்

(10 ஆம் பக்கம் பார்க்க)

முல்லைத்தீவில் குண்டுவீச்சு

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள முல்லைத்தீவு, நாயாறுப் பகுதிகளில் நேற்றுக்காலை 8.30 மணியளவில் விமானப்படையினரின் ஜெற்விமானங்கள் குண்டுவீச்சுத் தாக்குதல்களை நடத்தின.

விடுதலைப் புலிகளின் மணலாற்று முன்னரங்க நிலைகளின் பாதுகாப்பிற்காகப் பயன்படுத்தப்பட்டு வந்த கடற்புலிகளின் தளங்களை இலக்குவைத்தே இத்தாக்குதல்கள் நடத்தப்பட்டன என்று படைத்தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (சி)

அதிகாரப் பகிர்வு விவகாரத்தில்

13 ஆவது திருத்தத்துக்கு அப்பாலும் செல்வதற்கும் கூட அரசு தயாராம்!

கொழும்பு, பெப். 16

இனப்பிரச்சினைக்கான தீர்வாக அரசால் முன்வைக்கப்பட்டிருக்கும் அரசமைப்பின் 13 ஆவது திருத்தச்சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு குறுகிய காலத்திற்குள், அடுத்த - இரண்டாம் - கட்டமாக13 ஆவது திருத்தச்சட்டத்திற்கு அப்பால் சென்று தீர்வை முன்வைக்கவும்

(10ஆம் பக்கம் பார்க்க)

சகல இன மக்களையும் ஒன்றிணைக்கும் சமஷ்டி முறையை ஜே.வி.பி. ஆதரிக்கும்

அதன் தலைவர் சோமவன்ஸ கூறுகிறார்

கொழும்பு, பெப். 18

இலங்கையில் வாழும் அனைத்து இன மக்களையும் ஒன்றிணைத்து அவர் களை ஒரு நிலையில் வழிநடத்தக்கூடிய சமஷ்டி முறையை ஜே.வி.பி. ஆதரிக்கும். ஆனால், இன ரீதியான விரிசல்களை ஏற்படுத்தும் சமஷ்டியை அது கடுமையாக எதிர்க்கும். அமெரிக்காவிலும் சுவிட்ஸர்லாந்திலும்

(10 ஆம் பக்கம் பார்க்க)

கொழும்புச் செய்தியாளருக்கு ஆயுதக்குழு அச்சுறுத்தல்

கொழும்பில் இருந்து வெளிவரும் 'தினக்குரல்' பத்திரிகையின் அலுவலகச் செய்தியளார் ஏ.ஏ. முஹமட் அன்ஸீருக்கு ஆயுதக்குழுவொன்று கொலை மிரட்டல் விடுத்திருக்கிறது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அவர் எழுதுகின்ற செய்திகள் குறிப்

(10 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் காக்கைதீவுப் பகுதியில் ஐ.நா. அபிவிருத்தித் திட்ட பெயர்ப்பலகையை இலங்கை ஐ.நா.வதிவிடப் பிரதிநிதி நீல்போணி திரைநீக்கம் செய்வதையும் வீடுகளுக்கான பத்திரத்தை குடியிருப்பாளரிடம் கையளிப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- லக்ஸ்மன்)

ஐ.நா. உதவியுடன்

பூர்த்தியான மக்கள் நலன் திட்டங்கள் பயனாளிகளிடம் நேற்றுக் கையளிப்பு

யாழப்பாணம்,பெப்.16

ஐ.நாவின் உதவியுடன் குடாநாட்டில் பூர்த்தி செய்யப்பட்ட மக்கள் நலன் திட்டங்கள், கொழும்பில் இருந்து வந்த உயர் அதிகாரிகளால் நேற்று பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டன.

காக்கைதீவில் ஐ.நா. அபிவிருத்தித் திட்ட அமைப்பினால் 85 இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட 25 வீடுகள், 4 பொதுக் கிணறுகள் மற்றும் சனசமூக நிலையக் கட்டடம் என்பவற்றைப் பயனாளிகளிடம் கையளிக்கும் நிகழ்வில் இக் குழுவினர் கலந்துகொண்டனர்.

அதன் பின்னர், வட்டுக்கோட்டை, கோட்டைக்காட்டில் புனரமைக்கப்பட்ட வீதியை இக் குழுவினர் மக்கள் பாவனைக்காக சம்பிரதாய பூர்வமாக திறந்து வைத்தனர்.

அராலி, வேலவன் மீனவக் கூட்டுறவுச் சங்கத்துக்கென அமைக்கப்பட்ட மீன்கள் கூறு விற்பனை நிலையத்தைக் கையளிக்கும் நிகழ்விலும் அல்வாயிலுள்ள இளங்கோ சனசமூக நிலைய பொது நோக்கு மண்டபத்தை பயனாளிகளுக்கு கையளிக்கும் நிகழ்விலும் இவர்கள் கலந்துகொண்டனர்.

இந் நிகழ்வுகளுக்கு முன்னதாக நேற்றுக் காலை யாழ்.மாவட்ட அரச அதிபர் கே.கணேசை யாழ்.செயலகத்தில் சந்தித்து கலந்துரையாடினர். அதன் பின்னர் யாழ்.ஆயர் இல்லத்தில் வைத்து யாழ்.ஆயர் அதிவண. தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையை சந்தித்து யாழ். நிலைவரங்கள் குறித்து கேட்டறிந்தனர்.

ஐ.நாவின் மனிதாபிமான பணிகளுக்கான இணைப்பாளரும், ஐ.நா. அபிவிருத்தித் திட்ட வதிவிட பிரதிநிதியுமான நீல்போணி, ஐ.நாவின் மனிதாபிமான ஒருங்கிணைப்பு நிறுவனத்தின் உயர் அதிகாரியான செல்வி சோலா டுவெல், அகதிகளுக்கான ஐ.நா. உயர் ஸ்தானிகராலய உயர் அதிகாரி அக்ஸல் பிசப் மற்றும் ஐ.நா. செயற்திட்ட சேவைக்களுக்கான உயர் அதிகாரி ரெயினர் பிரான்பெல்ற் ஆகியோரே யாழ்ப்பாணம் வந்திருந்தனர்.

ஐ.நா. அமைப்புக்கள் யாழ்ப்பாணத்தில் மேற்கொண்டுள்ள பணிகள் குறித்து அறிவதற்கும் குடாநாட்டில் தற்போதைய களநிலைமைகள் குறித்து தெரிந்து கொள்வதற்குமே இவர் கள் இங்கு வருகை தந்திருந்தனர்.

நேற்றுப் பிற்பகலில் யாழ்.கோவில் வீதியில் உள்ள ஐநா அலுவலகத்தில்ஐநா அமைப்புக்களின் யாழ்.அலுவலக பிரதி நிதிகளுடனான சந்திப்பொன்று இடம் பெற்றது.

''இப்போதைய சூழ்நிலையில் ஐ.நா அமைப்பின் மக்களுக்கான வாழ்வாதாரப் பணி யாழ்ப்பாணத்தில் மிகவும் அவசியப் படுவதாக ஐ.நா.வதிவிடப் பிரதிநிதி உணர்ந்துள்ளார் என்பதை இச் சந்திப்பில் அறிய முடிந்தது.'' என்று ஐ.நா.அபிவிருத்தித் திட்ட யாழ்.அலுவலக தலைமை அதிகாரி கு.வி. நிஷாந்தன் தெரிவித்தார்.

இக் குழுவினர் கொழும்புக்கு புறப்படுவதற்கு முன்னதாக யாழ்.படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறீயையும் பலாலியில் சந்தித்து பேச்சுக்களை நடத்தினர். (அ-2-111)

தென்மராட்சியில் இன்று செயலமர்வு

தென்மராட்சிகல்விவலயப்பாடசாலைகளில் தரம் 11 வகுப்புகளில் விவசாயபாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான புதிய கல்வி சீர்திருத்தச் செயலமர்வு இன்று காலை 8.30 மணிக்கு சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் நடை பெறும் என வல யக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேத நாயகம் அறிவித்துள்ளார். (1-207)

மகிழ்வுடன் பாராட்டுகின்றோம்

அளவெட்டி - மல்லாகம் ப.நோ.கூ.சங்கத்தில் கடந்த அனர்த்த சூழ்நிலையிலும் குறைவின்றி நிறைவான சேவை புரிந்து முதலிடத்தைப் பெற்ற எமது

கணேஸ்வரம் கிளை - 06 இன் முகாமையாளராகிய

மு.இராசகுமாரையும்

அவரை எமது கிளைக்கு அமர்த்திய பணிப்பாளர் சபையையும் மனமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துபவர்கள்:

(அ/551494) **கணேஸ்வரம் வாழ் மக்கள்.**

பாராட்டி வாழ்த்துகின்றோம்

எமது பாடசாலையில் ஆரம்பக் கல்வியைக் கற்று 2007 ஆம் ஆண்டு பிற பாடசாலைகளில் க.பொ.த (உயர்தரப்) பரீட்சையில் தோற்றிச் சித்தியடைந்த அனைத்து மாணவர்களையும் பாராட்டுவதிலே பெருமகிழ்ச்சியடைகிறோம். இவ்வாண்டு பல்கலைக்கழக பீடங்களுக்கு புகும் தகைமை பெற்ற அனைத்து மாணவர்களையும் 20.02.2008 புதன்கிழமை பி.ப 2.00 மணிக்கு யாழ்.இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெறும் இல்ல மெய்வன்மைப் போட்டி நிகழ்வில் கௌரவ விருந்தினர்களாக கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை. பா.அ.சங்கம், ப.ம.சங்கம்.

யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி-சாவகச்சேரி பழைய மாணவர் சங்கம்

சாவகச்சேரி இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் விரைவில் நடைபெறவுள்ளது..மேற்படி சங்கத்தில் அங்கத்தவராக இணைய விரும்புவோர் விண்ணப்பப் படிவத்தினை பாடசாலை அலுவலகத்தில் பெற்று 05.03.2008 வரை விண்ணப்பிக்கலாம்.

அ. கைலாயபிள்ளை
தலைவர்/அதிபர்.

செ. செந்தூரன்
செயலாளர்.

(71180)

பாராட்டி வாழ்த்துகின்றோம்

திருமதி க.விக்னேஸ்வரன்

யாழ்.தம்பாட்டி அ.த.க.வித்தியாலயத்தில் 24.04.1997 - 07.12.2007 வரை 10 ஆண்டுகள் சேவையாற்றி இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள எமது ஆசிரியை சகல சௌபாக்கியங்களும் பெற்றுப் பல்லாண்டு காலம் நீடூழி வாழ வாழ்த்துவதுடன் இவரது சேவை எமது பாடசாலை சமூகத்திற்கு மென்மேலும் கிடைக்க வேண்டி நிற்கின்றோம். இவருடன் இடமாற்றம் பெற்றுச் சென்ற ஏனைய ஆசிரியர்களையும் வாழ்த்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், நலன் விரும்பிகள்.

(71182) யாழ்.தம்பாட்டி அ.த.க.வித்தியாலயம்.

மரண அறிவித்தல்கள்

திருமதி இராசகுமார் யோகேஸ்வரி

உயரப்புலம், ஆனைக்கோட்டை, பிடாரி கோயிலடி யைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராசகுமார் யோகேஸ்வரி 14.02.2008 வியாழக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அந்தோனிப்பிள்ளை-இராசாத்தியம்மா தம்பதியரின் செல்வப்புதல்வியும் இராசகுமாரின் பாசமிகு மனைவியும் ராஜன், சுபாசினி, டிலக்சன், நிக்சன், காலஞ்சென்ற சுலக்சினி ஆகியோரின் பாசமிகு தாயும் காலஞ்சென்ற அழகம்மா, செல்வரட்ணம், யோகம்மா, யேசுரட்ணம் (டென்மார்க்), யோகராஜா ஆகியோரின் அன்புச்சகோதரியும் சோமசுந்தரம், காலஞ்சென்ற சரோஜா மற்றும் இமெல்டா, இராசமலர், கிளி, இந்திராணி, மணி, யோகராஜா (டென்மார்க்) ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் சோபா (கொழும்பு), திலகராஜ்(லண்டன்), நெவின்ஸ்ராஜ்(லண்டன்), றொபின்ஸ்ராஜ் (லண்டன்), சிவராஜ் (லண்டன்), தாசினி (லண்டன்), யோவதி (இந்தியா), கிரிஜா (டென்மார்க்), ரஜனி (டென்மார்க்), நளினி(டென்மார்க்), ரதி(கொலன்ட்) ஆகியோரின் பாசமிகு சித்தியும் சுதா(டென்மார்க்), சுஜாதா(டென்மார்க்), ரேக்கா (டென்மார்க்), சதீஸ்குமார், சான்ஸ்குமார், செல்வராதிகா, ஆனந்தராஜ், அன்புராஜ், தாசிகா, விமல்ராஜ், அருமைராணி, இதயராணி, இதயராஜ், சிறிமா, உதயா, மேரி, சுரேஸ், மேரிஸ்ரெல்லா ஆகியோரின் பாசமிகு மாமியும் சாருஜன், சந்தோஸ் (டென்மார்க்), செந்தூரன், மயூரன், வினு, நிலா, ஜெனிஸ்ரெலா, வித்தியா, டுசன் ஆகியோரின் பாசமிகு அம்மம்மாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அவரது இல்லத்திலிருந்து இன்று (16.02.2008) சனிக்கிழமை மு.ப 10மணியளவில் ஆனைக்கோட்டை அடைக்கலநாயகி ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, பின் காக்கை தீவு சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பிடாரி கோயிலடி,
உயரப்புலம், ஆனைக்கோட்டை

தகவல்:
இரவிகுமார்
(கணவர் - சின்னா)

(71184)

திருவாட்டி இந்திராணி கதிரவேலு

கொக்குவிலைப் பிறப்பிடமாகவும், வதி விடமாகவும் கொண்ட திருவாட்டி இந்திராணி கதிரவேலு நேற்று (15.02.2008) வெள்ளிக் கிழமை காலமானார்.

அன்னார் அமரர் கனகசபை கதிரவேலுவின் அன்பு மனைவியும்,அமரர்கள் பொன்னம்பலம் - தங்கம் தம்பதியரின் அருமை மகளும், அமரர் கனகசபை தம்பதியரின் மருமகளும், திருஞானம்மா (பேபி), மகேஸ்வரி, புவனேஸ்வரி, இரத்தினேஸ்வரி (முன்னாள் ஆசிரியை, கொக்குவில் நாமகள் வித்தியாலயம், கொழும்பு பாத்திமா முஸ்லிம் வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்ற பேரின்பநாயகம் மற்றும் சுப்பிரமணியம், காலஞ்சென்ற பாலசுந்தரம் மற்றும் ஜதார்த்தநாதன் ஆகியோரின் மாமியும், ஞானபாலன் (சுரேஸ்), சுசி, சுஜாதா, சுகன், அகிலா, சரளா, ஜெயந், அனுசியா, சுதாகரராஜா, ஜெயக்குமார், பாலவேணி, கபிலன், ஜீவித்குமார், உமா ஆகியோரின் பேர்த்தியும், பிரியங்கன், பிரியனா, லக்ஷனா, அர்ச்சுனா, ஆர்த்திகா, அருண், விதுஷன், ஜீவிதன், அபிரா, சுபேதா, சுயந், வேரா, விகாஷ், சபரீஷன், காயத்திரி, ஆரணி, அர்ஜிவ் ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது கொக்குவில் இல்லத்தில் நாளை (17.02.2008) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11 மணியளவில் நடைபெற்று தகனக்கிரியை கொக்குவில் இந்து மயானத்தில் நடைபெறும்

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

செம்பாட்டு ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

தகவல்:
பிள்ளைகள்.

(A)

ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி

செல்வி

சாரங்கி ரஜீந்திரன்

தோற்றம்	மறைவு
10.04.1992	16.02.2003

குயில் கூவும் நேரம் உன் குரல் கேட்குது
சாரங்கி - எம்
குலம் விளங்க உதித்த குல விளக்கே
சாரங்கி!
எண் எழுத்தில் திறங்காட்டி விளங்கிய எம்
குட்டி சாரங்கி!
எங்கம்மா சென்றீர் எம்மை விட்டு சாரங்கி!

பி.ரஜீந்திரன் (ரஜீவன்)
(நாதஸ்வரம்)
குடும்பத்தினர்.

''சாரங்கம்''
393, கோயில் வீதி,
நல்லூர், 021 222 9125 (58209)

மலேசியாவில் உடனடி வேலைவாய்ப்பு

பிரபல ஜப்பானிய இலத்திரனியல் நிறுவனத்திற்கு சாதாரண ஆங்கில அறிவுடைய 18-28 வயதுக்கு உட்பட்ட பெண் உதவியாளர்கள் உடனடியாகத் தேவை.

சம்பளம் ரூ.20,000/- தொடக்கம் 25,000/- வரை

* தங்குமிட வசதி *மருத்துவ சேவை இலவசம்

10 நிழற்படங்களும்(passport size) சுய விவரத்துடன் (BIO-DATA) கீழ்காணும் முகவரியில் 20-02-2008 இற்கு முன் சமர்ப்பிக்கவும்.

விள இல. 3063
மே/யா உதயன்
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.சி. 060-2088168/011-7200948

(அ/551481)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்ணாகத்தில் வீடொன்றில் ஒடு பிரித்துத் திருட்டு

சுழிபுரம், பெப்.16

பண்ணாகத்தில் வீடொன்றில் பட்டப் பகலில் ஒடு பிரித்து இறங்கி நகைகளும் பெறுமதியான பொருள்கள் பலவும் திருடப் பட்டுள்ளன.

வீட்டிலிருந்த அனைவரும் உறவினர் வீட்டிற்கு நிகழ்வு ஒன்றிற்காகச் சென்றிருந்த வேளை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

50 ஆயிரம் ரூபா பெறுதியான தங்க நகைகள், கைத்தொலைபேசி, 2'டெக்' என்பன திருடப்பட்டுள்ளதாக வீட்டு உரிமையாளரால் வட்டுக்கோட்டைப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டது. (202-28)

சாவகச்சேரி டச்சு வீதி போக்குவரத்துக்குத் தடை

யாழ்ப்பாணம், பெப்.16

சாவகச்சேரி டச்சு வீதியினை இராமலிங்கம் வீதிச் சந்திவரை (சுமார் 300 யார் தூரம்) பொதுமக்கள் பாவனை செய்வது தடை விதிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப் பட்டிருக்கிறது.

எனினும் இவற்றுக்கு இடைப்பட்ட பகுதியில் உள்ள சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியின் ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் தென்மராட்சி கல்வி வலயம், சாவகச்சேரி நீதிமன்றம் ஆகியவற்றின் பணியாளர்கள் ஆகியோர் வேலை நாள்களில் இப் பாதையைப் பயன்படுத்த அனுமதிக்கப்படுவர் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளன.

இவ் வீதியில் வாகனங்கள் செல்வது கடந்த ஒரு மாதமாகத் தடைசெய்யப்பட்டிருந்த போதிலும் பொதுமக்கள் நடந்து செல்ல அனுமதிக்கப்பட்டிருந்தனர். (அ-1)

வலி. கிழக்குப் பிரதேச முன்பள்ளி ஆசிரியர்களுக்கு உதவிக் கொடுப்பனவு

யாழ்ப்பாணம், பெப்.16

வலி.கிழக்கு பிரதேச முன்பள்ளி ஆசிரியர்களுக்கு சத்துணவு வழங்கப்பட்டமைக்குரிய உதவிக் கொடுப்பனவும் முன்பள்ளி மாணவர்களுக்கான அடுத்த கட்ட சத்துணவும் இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு வலி.கிழக்குப் பிரதேச சபைத் தலைமை அலுவலகத்தில் வைத்து வழங்கப்படவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி மதுமிதா வசந்தகுமார் கலந்து கொள்வார். (202)

நவாலி வடக்கில் நாச்சிமார் ஆலய வீதி புனரமைப்பின்றிச் சேதம்

யாழ்ப்பாணம், பெப்.16

நவாலி வடக்கு,- நாச்சிமார் ஆலய வீதி நீண்டகாலம் புனரமைப்புச் செய்யப்படாததால் போக்குவரத்து முற்றாகத் தடைப்படும் அளவிற்கு மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

கடந்த 32 வருடங்களுக்கு மேலாக மேற்படி வீதி மீள்புனரமைப்பு இன்றி கற்கள் வெளிக்கிளம்பியுள்ளன. இவ்வீதியால் சைக்கிள்களில் வருவோர் இறங்கி செல்வதைக் காணக் கூடியதாக உள்ளது.

இவ்வீதியில் போக்குவரத்து செய்ய முடியாதுள்ளதாக அப்பகுதி மாணவர்களும், விவசாயிகளும், வியாபாரிகளும், அரச அலுவர்களும் விசனம் தெரிவித்துள்ளனர்.

கருத்தரங்கு

நாவற்குழி, பெப்.16

''சமூக வளர்ச்சியில் எம் ஒவ்வொருவரின் கடமையும் பொறுப்பும் என்ன?'' என்ற தலைப்பிலான கருத்தரங்கு நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அச்செழு, பூலசிட்டியிலுள்ள வள்மதி சனசமூக நிலையத்தில் நடைபெறவுள்ளது. (202-288)

அரியாலைப் பிரதேச மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்குப் புலமைப் பரிசில்

யாழ்ப்பாணம், பெப்.16

அரியாலையில் வறுமைக்கோட்டின் கீழ் வாழும், கல்வியில் ஆர்வமும் திறமையும் உள்ள மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்கென அரியாலை அபிவிருத்திச் சங்கம் புலமைப் பரிசில் திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்தவுள்ளது.

மாணவர்களை ஜி.சீ.ஈ. சாதாரண தரம், உயர்தரத்தில் ஒரே எத்தனத்தில் சித்திபெறச் செய்யவும் பல்கலைக்கழக அனுமதியைப் பெறச் செய்வதையும் நோக்கமாகக் கொண்டு இப்புலமைப் பரிசில் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

அரியாலை பிரதேசத்தைச் சொந்த இடமாகக் கொண்டு, பெற்றோர் அல்லது பாதுகாவலர் தமது சங்கத்தில் அங்கத்தவராக இருப்பின் அவர்களது மாணவர் இப்புலமைப் பரிசிலுக்கு விண்ணப்பிக்க முடியும் என்று அரியாலை அபிவிருத்திச் சங்கதினர் தெரிவித்துள்ளனர்.

பெற்றோரை இழந்த, தாய் அல்லது தந்தையை இழந்த மாணவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். தெரிவு செய்யப்படும் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்படும். பாடசாலைக் கல்விக்கு மேலதிகமாகத் தனியார் கல்வி நிறுவனத்தினூடாக வகுப்புகள் நடத்தப்படும் - என்று சங்கத்தினர் தெரிவித்தனர். (202)

முகாமை உதவியாளர்களுக்கான பதவியுயர்வு: பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

யாழ்ப்பாணம், பெப்.16

அரச திணைக்கள அலுவலகங்களில் பணியாற்றும் முகாமை உதவியாளர் சேவையின் தரம்-I ஐச் சேர்ந்த உத்தியோகத்தர்களை திறமையடிப்படையில் அதிசிறப்பு வகுப்புக்கு பதவியுயர்வு நியமனம் வழங்குவதற்கான போட்டிப் பரீட்சைக்குரிய விண்ணப்பங்கள் மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவினால் கோரப்பட்டுள்ளன.

பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளரின் 2008.01.17 ஆம் திகதிய 03/2008 இலக்க சுற்றறிக்கையில் குறிப்பிட்டுள்ள தகைமைகளையுடைய வடக்கு மாகாண முகாமை உதவியாளர் சேவையின் வகுப்பு -I இல் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்பங்களைத் திணைக்களத் தலைவரின் சிபார்சுடன் எதிர்வரும் 27ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு ஆணைக்குழுவின் செயலாளர் எஸ்.திருவாகரன் கேட்டுள்ளார். (202-207)

தென்மராட்சிப் பிரதேச மாதர் சங்கங்களுக்கு அரச சார்பற்ற நிறுவனங்கள் வாழ்வாதார உதவிகள்

யாழ்ப்பாணம், பெப்.16

தென்மராட்சிப் பிரதேசத்தில் இயங்கும் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களுக்கு அரச சார்பற்ற நிறுவனங்கள் மூலம் வாழ்வாதார உதவிகள் வழங்கப்படவுள்ளன.

வாழ்வாதார உதவிகள் வழங்குவதற்கு சங்கங்களின் பதிவு இலக்கங்கள் அவசியம் என்பதால் இதுவரை பதிவு செய்யாத மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களை பிரதேச செயலக கிராம அபிவிருத்திப் பிரிவுடன் தொடர்பு கொள்ளுமாறு பிரதேச செயலர் செ. ஸ்ரீநிவாசன் கேட்டுள்ளார்.

கைதடி மேற்கு, தாவளை இயற்றாலை, மீசாலை மேற்கு, கைதடி நுணாவில், எழுது மட்டுவாழ் படித்த மகளிர் குடியேற்றத் திட்டம், தென்மட்டுவில், இடைக்குறிச்சி கிழக்கு, மீசாலை வடக்கு, இராமாவில், வரணி வடக்கு, மட்டுவில் கிழக்கு, மந்துவில் மேற்கு-

அல்லாரை, இடைக்குறிச்சி மேற்கு, கைதடி கிழக்கு, மண்டுவில், கரம்பைக்குறிச்சி, நுணாவில் மேற்கு, சாவகச்சேரி வடக்கு, மிருசுவில் வடக்கு ஆகிய 20 மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களே இதுவரை பதிவு செய்யப்படவில்லை என்றும்- அவற்றை பதிவு செய்யுமாறும் அவர் கேட்டுள்ளார்.

இதேபோன்று பதிவு செய்யாத ஏனைய சங்கங்கள் புதிய யாப்பு விதிகளுக்கமையப் பதிவினை மேற்கொள்ளலாம் என்றும் அவர் தெரிவித்தார். (202-207)

கூத்துப் போட்டிகள்

யாழ்ப்பாணம், பெப்.16

யாழ்ப்பாண மாவட்ட கல்வி, கலாசாரப் பேரவையின் ஏற்பாட்டில் சிறந்த கூத்துகளை மேடையேற்றுவதற்கு திறந்த பிரிவுக்கு விண்ணப்பித்தவர்களுக்கான போட்டிகள் அடுத்த மாதம் 8ஆம், 9ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன.

போட்டி தொடர்பான விவரங்கள் விண்ணப்பதாரர்களுக்குப் பின்னர் அறிவிக்கப்படும் என பேரவையின் உபதலைவரும் யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபருமான ஆ.சிவசுவாமி தெரிவித்தார். (202)

ஊர்காவற்றுறையில் ஓய்வூதியர் கூட்டம்

யாழ்ப்பாணம், பெப்.16

ஊர்காவற்றுறை தொகுதி ஓய்வூதியர் சங்கத்தின் பொதுக்கூட்டம் இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பணிமனையில் இடம்பெறவுள்ளது.

ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் கே. ஸ்ரீமோகனன் தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு சகல ஓய்வூதியர்களும் அழைக்கப்பட்டுள்ளனர். (ஆ-1)

காரைநகர் பிரதேசசபைக்கு பிக்கப், லான்மாஸ்டர் வழங்கப்பட்டன

யாழ்ப்பாணம், பெப்.16

புதிதாக உருவாக்கப்பட்ட காரைநகர் பிரதேச சபைக்கு பிக்கப் வாகனமும், லான்ட் மாஸ்டர் உழவு இயந்திரமும் வழங்கப்பட்டுள்ளன.

பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் உள்ளூராட்சி மன்றங்களுக்கு வாகனங்கள் கையளிக்கும நிகழ்வு இடம் பெற்றது.

உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சர் ஜனகபண்டார தென்னக்கோன் இந்நிகழ்வில் கலந்து கொண்டு உள்ளூராட்சி மன்றங்களின் பொறுப்பதிகாரிகளிடம் வாகனங்களைக் கையளித்தார்.

இந்நிகழ்வில் வைத்து காரைநகர் பிரதேச சபைக்குரிய பிக்கப் வாகனம் மற்றும் லான்ட் மாஸ்டர் ஆகியன கையளிக்கப்பட்டன.

வெகுவிரைவில் இவ் வாகனங்கள் கொழும்பில் இருந்து கப்பலில் இங்கு கொண்டுவரப்படவுள்ளன. (203-68)

சூழ்நிலைகளைச் சாதகமாகப் பயன்படுத்தி மாணவர்கள் தமது ஆற்றலை வளர்க்க வேண்டும்

ஐ.ஐ.எஸ்.நிறுவன இயக்குநர் ஆலோசனை

யாழ்ப்பாணம், பெப்.16

மாணவர்கள் சூழ் நிலை களைக் காரணம் காட்டித் தமது கல்விச் செயற்பாட்டை முடக்கக்கூடாது. அச்சூழ்நிலையையும் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளும் ஆற்றலை வளர்த்திட வேண்டும்.

இவ்வாறு ஐ.ஐ.எஸ்.கணனி நிறுவனத்தின் இயக் குநர் கு.விக்னேஸ் குறிப்பிட்டார்.

அந்த நிறுவனத்தின் 12ஆவது நிறுவன தின விழாவும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் அண்மையில் யாழ்.சென் ஜோன்ஸ் கல்லூரியின் யூபிலி மண்டபத்தில் நடைபெற்றன. இந்நிகழ்வில் தலைமையுரை நிகழ்த்தும் போதே இயக்குநர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

எமது நிறுவனமானது கணனிப் பயிற்சி நிலை யம் அல்ல, இலங்கையில் வடக்கு, கிழக்கிலே உயர்கல்வியை வழங்கி வருகின்ற ஒரு முதன்மையான தனியார் உயர் கல்வி நிறுவனம் ஆகும். மாணவர்கள் உயர் தேசிய டிப்ளோமா, இளமாணி மற்றும் முதுமாணி பட்டக்கல்விகளைத் தகவல் தொழில் நுட்பம் மற்றும் வர்த்தக முகாமைத் துவத் துறைகளிலே மேற்கொள்ளக்கூடிய வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன. இக்கற்கைநெறிகள் உலகில் முதன்மையான பல்கலைக்கழகங்கள், உயர் கல்வி நிறுவனங்களுடன் இணைந்து வழங்கப்படுவது குறிப்பிடத்தக்கதாகும்.

தொழில்நுட்ப தரப்படுத்தலில் தகவல் தொழில்நுட்பத்துறை ஓர் உயர்நிலைத் தொழில்நுட்பம் ஆகும். எனவே இத்துறையில் மாணவர்கள் ஆர்வம் காட்டுவது அவர்களுக்கு ஒரு சிறந்த எதிர்காலத்தினை உருவாக்கிக் கொடுக்கும் என்பது நிச்சயமாகும்.

தகவல் தொழில்நுட்பம், உயர்நிலைத் தொழில்நுட்பம் என்பதால் இன்று உலக வேலை வாய்ப்புச் சந்தையிலே தகவல் தொழில்நுட்ப வல்லுநர்களுக்கு அதிக வரவேற்பு இருப்பதும் அவர்களே அதிகமான ஊதியம் பெறுவதும் மற்றும் மாண வர்கள் தகவல் தொழில்நுட்ப துறையிலே உயர் கல்வியைத் தொடர்வதற்குரிய அதிக வாய்ப்புகள் பல்கலைக்கழகங்களிலும் கல் லூரிகளிலும் அதிகமாக இருப்பதும் குறிப்பிடத் தக்கதாகும்.

குடாநாட்டைப் பொறுத்தவரையில் மாணவர்கள் மத்தியில் காணப்படும் மிகப் பெரிய தவறு நாட்டின் அசாதாரண சூழ் நிலையைக் காரணம்காட்டி உயர்கல்வியைத் தொடராமல் தமது கல்விச் செயற்பாட்டிற்கு முற்றுப்புள்ளி வைத்து விடுவதாகும். இதற்குப் பெற்றோரும் உறுதுணையாக இருப்பது வருந்தத்தக்கதாகும். ஜப்பான் நாட்டினை நாம் முன்னுதாரணமாக எடுத்துக்கொள்ள வேண்டும். சூழ்நிலையை மாணவர்கள் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளும் ஆற்றலை வளர்க்க வேண்டும்- என்றார்.

இந்நிகழ்வில், கடந்த கல்வியாண்டில் கணனிக் கல்வியை முடித்துக்கொண்ட 750 இற்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு சான்றிதழ்களும் சிறப்பாகச் செயற்பட்ட மாணவர்களுக்கு சிறப்பு விருதுகளும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

நிறுவனத்தின் வளர்ச்சிக்கு அரும்பணியாற்றியவரும் இயக்குநரின் தந்தையுமாகிய அமரர் வை.குலரட்ணம் ஞாபகார்த்த விருதும் வழங்கப்பட்டது. (202)

ஐ.ஐ.எஸ். கணனி நிறுவனத்தின் 12ஆவது நிறுவன தின நிகழ்வும் பரிசளிப்பு நிகழ்வும் அண்மையில் சென்.ஜோன்ஸ் கல்லூரி யூபிலி மண்டபத்தில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள்.

நிறுவன இயக்குநரும் நிறுவன நிறைவேற்று அதிகாரியுமான கு.விக்னேஸ், மாணவி ஒருவருக்கு சான்றிதழ் வழங்குவதை முதலாவது படத்திலும்-

நிகழ்வில் கலந்துகொண்ட விருந்தினர்களை இரண்டாவது படத்திலும் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது மண்ணில் அனைத்துத் துறைகளும் போர்ச்சூழலில் வளர்ச்சி பெறவேண்டும்

அதுவே தலைவர் பிரபாவின் பெரு விருப்பு என்கிறார் நடேசன்

கிளிநொச்சி,பெப்.16

எமது மண்ணில் அனைத்துத் துறைகளுக்கும் போர்ச்சூழலில் வளர்ச்சி பெற வேண்டும் என்பதில் எமது தேசியத்தலைவர் பெரு விருப்புக்கொண்டு செயற்பட்டு வருகின்றார் என்று தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி ஆங்கில மொழிக் கல்லூரியின் புதிய கட்டடத் திறப்பு மற்றும் 5ஆம் அணியினருக்கான கற்றல் தொடக்க நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

போர்ச்சூழலில் ஆங்கில மொழியினைக் கற்று அதனை எமது மாணவர்களிடையே கற்பிக்கின்ற பணியினை மேற்கொள்ளுகின்றவர்களின் கற்றல் தொடங்குகின்ற ஒரு மகிழ்வான நாள் இன்று.

போர்ச்சூழலில் இத்தகையச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுவது பாராட்டுக்குரியது. போர்ச்சூழலில் எதிரியானவன் தமிழர்களின் அனைத்துத் துறைகளையும் முடக்கி விடுகின்ற நிலை காணப்படுகின்றது.

ஆனால் எமது மண்ணில் அனைத்துத் துறைகளும் போர்ச்சூழலில் வளர்ச்சிபெற வேண்டும் என்பதில் எமது தேசியத் தலைவர் பெருவிருப்புக்கொண்டு செயற்பட்டு வருகின்றார்.

சிங்கள அரசுகள் எமது விடுதலைப் போராட்டத்தின் தொடக்கத்தில் எமது மொழி, கல்வி, பண்பாட்டு அம்சங்களைச் சிதைக்கவேண்டும் என்பதிலேயே பெரும் முயற்சி மேற்கொண்டன.

ஆனால் எமது விடுதலைப் போராட்டமும் எதிரியின் பெரும் சவால்களை எதிர்கொண்டு தொழில்நுட்பம், மருத்துவம் உட்பட பெரும் துறைகளில் பெரும் வளர்ச்சி கண்டுள்ளது.

எமது கல்வித்துறையில் ஆசிரியர் பற்றாக்குறை உள்ளபோதும் இக்கல்லூரியினூடாக பயிற்றுவிக்கப்படவுள்ள ஆசிரியர்கள் நாளை எமது மாணவர்கள் மத்தியில் பணியாற்றுவது என்பது ஒரு சிறப்பான விடயம்.

தற்போது உள்ள பதற்றமான சூழல்களையும் நெருக்கடிகளையும் பொருட்படுத்தாமல் தாம் மேற்கொள்கின்ற பணியில் முன்னேற வேண்டும் - என்றார் பா.நடேசன்.

கடந்த புதன்கிழமை முற்பகல் 9 மணிக்கு நடைபெற்ற இந்நிகழ்வில், தமிழீழக் கல்விக் கழகப் பொறுப்பாளர் வெ.இளங்குமரன் பொதுச்சுடரினை ஏற்றினார்.

தமிழீழ தேசியக் கொடியினை தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் ஏற்றினார். கல்லூரிப் பெயர்ப்பலகையினை பா.நடேசன் திரைநீக்கம் செய்து வைத்து புதிய [illegible]டத்தினையும் திறந்து வைத்தார்.

கல்லூரி முத[illegible]ன்.நளாயினி தலைமையுரை நிகழ்த்[illegible]ா.

தமிழீழ கல்வி [illegible]மேம்பாட்டுப் பேரவைத் தலைவர் பிரான்சிஸ் யோசப் அடிகளார் வாழ்த்துரை நிகழ்த்தினார்.

தமிழர் புனர்வாழ்வுக் கழக அனுசரணையுடன் ஆங்கில மொழிக் கல்லூரி இயங்கி வருகின்றது.

மாதாந்த உதவிப் பணக் கொடுப்பனவு

வலி.தென்மேற்கு,பெப்.16

வலி.தென்மேற்கு (சண்டிலிப்பாய்) பிரதேச செயலகப் பிரிவில் பொதுசன மாதாந்த உதவிப் பணக் கொடுப்பனவைப் பெற்று வருபவர்களுக்கான பெப்ரவரி மாதக் கொடுப்பனவு அந்தந்த தபாலகங்களுக்கு பிரதேச செயலகத்தினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, மாதாந்த உதவிப் பணக் கொடுப்பனவை பெற்றுவரும் புற்றுநோயாளர்கள், காசநோயாளர்கள், தொழுநோயாளர்கள் ஆகியோருக்கான கொடுப்பனவும் தபாலகங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டிருப்பதாகப் பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

(202-135)

மலர் வெளியீடு

சுழிபுரம், பெப்.16

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியின் 125ஆவது ஆண்டு நிறைவு நினைவு மலர் வெளியீடு எதிர்வரும் புதன்கிழமை போயா தினத்தன்று பிற்பகல் 2 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் திருமதி அ.வேலுப்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட நீதிமன்ற நீதிபதி இ.த.விக்னராஜா கலந்துகொள்வார்.

மலர் வெளியீட்டை இ.சங்கர் நிகழ்த்த முதற்பிரதியை எ.என். மனுநீதி பெற்றுக் கொள்வார். (202-28)

பசான் பாடல் ஒலிபரப்பு

வலி.தென்மேற்கு, பெப்.16

தவக்கால நோன்பை முன்னிட்டு பண்டத்தரிப்பு அன்னை பற்றிமா மாதா ஆலயத்தில் யேசு கிறிஸ்துநாதரின் திருப்பாடுகள் பற்றிய பசான் பாடல்கள் தினமும் காலை 5.30 மணி முதல் காலை 6 மணி வரை ஒலிபரப்பப்பட்டு வருகின்றது.

இதேவேளை- இப்பகுதியிலுள்ள கத்தோலிக்க தேவாலயங்களில் தவக்கால நோன்பை முன்னிட்டு பூசை வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன. (202-135)

தவறிவிட்டது

மகாலிங்கம் பிரவீன்ராஜ் என்பவரது தேசிய அடையாள அட்டை (911182777V), போன், டயரி, குடும்ப அட்டை, பிரதி என்பன கல்வியங்காட்டிற்கும் பாற்பண்ணைக்கும் இடையில் தவறிவிட்டன. இவற்றைக் கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரியில் தந்துதவுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திருமதி மா.மகாலிங்கம் (பேரனாரியர்),
சைவ சிறுவர் இல்லம், கலாசாலை வீதி, திருநெல்வேலி.
தொ.பே.இல: 021 - 222 6525

பதவி வெற்றிடங்கள்

தேச நிர்மாணம் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சு

மீள் எழுச்சித் திட்டம் - உலக வங்கியின் நிதி உதவியுடன் செயற்படும் திட்டம்

சமுதாய முரண்பாட்டால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கான சமூக ஜீவனோபாய திட்டம்

மீள் எழுச்சித் திட்டம் உலக வங்கியின் (IDA) நிதி உதவியுடன் செயற்படுத்தப்படும் ஒரு திட்டமாகும். இத்திட்டம் வடக்கு-கிழக்கு மாகாணத்திலுள்ள எட்டு (08) மாவட்டங்களிலும் இம்மாகாணத்திற்கு அண்டிய மாவட்டங்களான அநுராதபுரம், பொலன்னறுவை, மொனராகல, புத்தளம் ஆகிய மாவட்டங்களில் உள்ள எல்லைக் கிராமங்களிலும் 2010ஆம் ஆண்டு வரை செயற்படுத்தப்படவுள்ளது.

கீழே குறிப்பிடப்பட்டுள்ள அவ்வப் பதவிகளுக்குரிய கல்வித் தகைமைகளையும் ஏனைய தகைமைகளையும் பெற்றவர்களிடமிருந்து தேச நிர்மாணம் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சினால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பதவி	பதவி	பதவி	பதவி	பதவி	பதவி
சமூக அபிவிருத்தி நிபுணர்	1	சமூக வலுவூட்டல் உத்தியோகத்தர்	5	சேகரிப்பு உத்தியோகத்தர்	1
பிரதி திட்டப்பணிப்பாளர்	1	சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்	6	நிர்வாக உத்தியோகத்தர்	1
திட்டக்கணக்காளர்	1	சமூக வலுவூட்டாளர்	7	சிரேஷ்ட பொறியியல் உதவியாளர்	1
சிரேஷ்ட பொறியியலாளர்	1	வழிநடத்தல் மதிப்பீடு செய்தல் உத்தியோகத்தர்	2	பொறியியல் உதவியாளர்	4
சிரேஷ்ட கணக்காய்வாளர் - நிதி	2	நிதி மற்றும் வழிநடத்தல் உத்தியோகத்தர்	1	சிரேஷ்ட படவரைஞர் (உள்ளகக் கணக்காய்வு)	2
திட்டப்பொறியியலாளர்	8	பாலின உத்தியோகத்தர்	1	உதவிக் கணக்காய்வு உத்தியோகத்தர் - நிதி	4
சிரேஷ்ட சமூக வலுவூட்டல் உத்தியோகத்தர்	2	சுற்றாடல் உத்தியோகத்தர்	2	படவரைஞர்	1

பொதுவிதிகள்

பதவி தற்காலிகமானது. முதலில் ஒரு வருடத்திற்கு நியமனம் ஒப்பந்த அடிப்படையில் வழங்கப்படும். அதன்பின்னர் நிறுவனத்தின் தேவைக்கு ஏற்பவும் முதல் வருட சேவைக் காலத்தில் திருப்திகரமாகச் சேவை ஆற்றியிருப்பினும் தொடர்ந்து சேவை நீடிப்பு வழங்கப்படும்.

1. விண்ணப்பதாரி இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.
2. இத்திட்டம் செயற்படவுள்ள வடக்கு - கிழக்கு மாகாணத்தின் எப்பகுதியிலும் இம்மாகாணத்திற்கு அண்டிய ஏனைய மாவட்டங்களிலும் கடமையாற்றக்கூடிய சுகதேக ஆரோக்கியத்துடன் இருத்தல்வேண்டும்.
3. ஆங்கிலத்தில் போதிய தேர்ச்சி பெற்றிருத்தல் அவசியமாகும். அத்துடன் சிங்கள மொழி அல்லது தமிழ் மொழியில் கடமையாற்றக்கூடியவராக இருத்தல் விரும்பத்தக்கது.
4. விண்ணப்பதாரிகள் கணனி பிரயோகத்தில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.
5. தகைமையுடைய பெண் விண்ணப்பதாரிகள் விண்ணப்பிப்பது மிகவும் விரும்பத்தக்கது.

வயதெல்லை: முகாமைத்துவ சேவை சுற்றுநிரூபத்தின் பிரகாரம் 57 வயதிற்குபட்டவர்களுக்கு முன்னுரிமையளிக்கப்படும்.

விண்ணப்பிக்கும் முறை: தகுதியான விண்ணப்பதாரிகள் தங்களது முழுப்பெயர், முகவரி, பிறந்த திகதி, கல்வித்தகைமைகள், தொழில் தகைமை, முன்னைய வேலை அனுபவங்கள் ஆகிய விவரங்களைக் குறிப்பிட்டு தமது விண்ணப்பத்தினை தயாரித்து பதிவுத் தபாலில் திட்டப்பணிப்பாளர், திட்ட முகாமைத்துவப் பிரிவு, மீள் எழுச்சித்திட்டக் காரியாலயம், கன்னியா வீதி, வரோதய நகர், திருகோணமலை எனும் முகவரிக்கு 27.02.2008ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்புதல் வேண்டும். விண்ணப்பம் அனுப்பும் தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும். அரச சேவையில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் தமது விண்ணப்பத்தினை தமது திணைக்களத் தலைவர்/ செயலாளருக்கூடாக விண்ணப்பித்த பதவிக்கு தெரிவு செய்யப்படும் தருணத்தில் விடுவிப்பதற்கான சிபாரிசுடன் அனுப்புதல்வேண்டும். விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பத்தில் தாங்கள் கடமையாற்ற விரும்பும் மாகாணத்தினை வடக்கு அல்லது கிழக்கு என குறிப்பிடுதல் வேண்டும்.

தெரிவுசெய்யும் முறை விண்ணப்பங்கள் வரையறைக்குட்படுத்தப்பட்டுள்ளதால் தகுதி அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்ட குறிப்பிட்ட விண்ணப்பதாரிகளே நேர்முகப் பரீட்சைக்குத் தேர்ந்தெடுக்கப்படுவர்.

சம்பளம்: முகாமைத்துவ சேவை சுற்றுநிரூபம் இல.33இன் பிரகாரமும் (05.04.2007) பொதுநிர்வாக சுற்றுநிரூபம் 6/2006 இன் பிரகாரமும் சம்பளம் வழங்கப்படும்.

விண்ணப்பதாரிகள் www.neiap.org எனும் இணையத்தளத்திலும் neiap@sltnet.lk எனும் மின்னஞ்சல் முகவரியிலும் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம். மேற்குறிப்பிடப்பட்டுள்ள முறைகளில் தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியாதவர்கள் மாவட்ட மீள் எழுச்சித் திட்டக் காரியாலயங்களில் உரிய தகவல்களைப் பெற்றுக்கொள்ளமுடியும்.

பி.எச்.சுகததாஸ,
திட்டப்பணிப்பாளர், திட்ட முகாமைத்துவப் பிரிவு,
"மீள் எழுச்சித் திட்டம்".

(சி/551487)

கண்ணீர் அஞ்சலி

எமது அலுவலகத்தில் முகாமைத்துவ உதவியாளராகக் கடமையாற்றும்

திருமதி அனிற்றா யசோதா கனஸ்ரோய் மதிவதனன்

அவர்களின் அன்புத் தந்தையார்

அமரர் அருளானந்தம் கிறிஸ்ரி

அவர்கள் 14.02.2008 அன்று காலமானதையிட்டு அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலகம், சகல நலன்புரிச் சங்க அங்கத்தவர்களும்,
நலன்புரிச் சங்கம், பிரதேச செயலகம்,
வலி.வடக்கு, தெல்லிப்பழை.

(71177)

IRD

International Relief and Development (IRD) is a USA based non-governmental organization working in several parts of Sri-lanka. IRD works in collaboration with a wide range of organizations in the design and implementation of humanitarian relief and development aid programs.

IRD is looking for enthusiastic and qualified staff for the following positions & locations:

Based in Jaffna

Project Coordinator/Team Leader
Community Development Officers (4x)
Finance & Admin Officer
Technical Officers

Duration of assignments:
6 (six) months, possibility of extension.

Qualifications:
* Minimum of 5 years experience in an International NGO or similar field .
* University degree.
* IT skills (Microsoft package and Internet use)
* Fluency in spoken and written English.
* Willingness to travel to North & East Sri Lanka

Salary based on qualifications & experience.

IRD prefers to receive your application by email, please send your Curriculum Vitae, including 2 referees to: info@irdsl.org with the position you apply for in the subject line.

Only short listed candidates will be called for interviews.

If email is not possible applications can be submitted by postal mail.

(C/71179)

ஐக்கிய முழு இரவு ஜெபம்

இடம்: சர்வதேச கல்லூரி மண்டபம், மானிப்பாய்
காலம்: 22.02.2008 வெள்ளிக்கிழமை
நேரம்: இரவு 7 மணி தொடக்கம் காலை 5 மணிவரை
ஆராதனை இணைப்பாளர்: போதகர் றெஜி எபநேசர்

யாழ்.மாவட்ட கிறிஸ்தவ ஊழியர்களின் ஐக்கியத்தின் வழிநடத்தலில் நாட்டிற்காக விழிப்பு இரவு ஆராதனை சர்வதேச கல்லூரி மண்டபம் மானிப்பாயில் நடைபெறும் என்பதனை மகிழ்வுடன் அறியத்தருகின்றோம்.

யாழ்.மாவட்டத்தில் உள்ள அனைத்து கிறிஸ்தவ சபைகளும், ஆர்வமுள்ளவர்களும், நண்பர்களும் கலந்து கொள்ளும் ஒரு விஷேசித்த ஜெப இரவு.

- நிர்வாகம்
யாழ்.மாவட்ட கிறிஸ்தவ ஊழியர்களின் ஐக்கியம்.

குறிப்பு: (வலிகாமம் ஐக்கியத்தின் 23.02.2008 ஜெபம் நடைபெறாது என்பதனையும் அறியத்தருகின்றோம்)
(20.02.2008 பே[illegible] பெனான்டஸின் - கருத்தரங்கு சீதத்தை மாதத்திற்கு பிற்போ[illegible]பட்டுள்ளது).

(71178)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணத்தில் கிரிக்கெட்டுக்கு புத்துயிருட்ட பல்வேறு செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்படும்

யாழ்.மாவட்ட கிரிக்கெட் சங்கத்தின் தலைவர் கணேசநாதன் செவ்வி

யாழ்ப்பாணத்தில் சிறந்த கிரிக்கெட் வீரர்களை உருவாக்க பாடசாலை மட்டத்தில் வீரர்களுக்கு முழுமையான பயிற்சி வழங்கப்பட வேண்டும். யாழ்ப்பாணக் கிரிக்கெட் சங்கம் விரைவில் பாடசாலைகளுடன் இணைந்து கிரிக்கெட் வீரர்களுக்குத் தொழில்நுட்ப வளத்துடன் கூடிய பயிற்சி முகாம்களை நடத்தவுள்ளது. அதற்கான முன் முயற்சிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

யாழ்ப்பாணம் கிரிக்கெட் சங்கத்தின் தலைவரும் யாழ். பல்கலைக்கழக உடற்கல்வி அரசின் பதில் பணிப்பாளருமான கணேசபிள்ளை கணேசநாதன் இதனைத் தெரிவித்தார்.

குடாநாட்டின் கிரிக்கெட்துறை தொடர்பாக அவர் வழங்கிய செவ்வி வருமாறு:-

குடாநாட்டின் தற்போதைய சூழ்நிலை கிரிக்கெட் வளர்ச்சிக்கும் இடையூறாக அமைகின்றது. பாடசாலைகளும் கழகங்

களும் உரிய பயிற்சிகளைச் சீராக பெற்றுக் கொள்ளும் வாய்ப்பு இல்லை.

கிரிக்கெட்டை அபிவிருத்தி செய்ய வேண்டிய பொறுப்பும், கடமையும் இவ் விளையாட்டுடன் தொடர்புடைய பாடசாலைகள், கழகங்கள், ஆதரவாளர்கள் என அனைவருக்கும் உண்டு. யாழ்ப்பாணக் கிரிக்கெட் சங்கம் என்ற வகையில் அனைவருடனும் இணைந்து கிரிக்கெட்டை வளர்ப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

இந்த வகையில் சிநேகபூர்வமான போட்டிகளையும், சுற்றுப் போட்டிகளையும் கிரிக்கெட் சங்கமும், கழகங்களும் நடத்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இதற்குவேண்டிய ஏற்பாடுகளை சங்க நிர்வாகம் எதிர்காலத்தில் மேற்கொள்ளும்.

சர்வதேச மட்டத்தில் இடம்பெறும் போட்டிகளான 50 ஓவர்கள், 30 ஓவர்கள் கொண்ட ஒரு நாள் போட்டிகள் தற்போது இடம்பெற்று வருகின்றன. இதே போன்று பாடசாலைகள் மட்டத்தில் குறிப்பிட்ட சில பாடசாலைகள் இரண்டு நாள் போட்டிகளிலும் விளையாடுகிறார்கள்.

தற்போது சர்வதேச அரங்கில் 'ருவென்ரி-20' போட்டி பிரபல்யம் பெற்று வருகின்றது. குடாநாட்டில் இந்தப் போட்டிகள் இதுவரை நடத்தப்படவில்லை. இந்த வகையில் இந்த 'ருவென்ரி-20' போட்டியை கழகங்கள் நடத்த முன்வந்தால் முழுமையான ஒத்துழைப்பையும், ஊக்குவிப்புகளையும் வழங்க நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

பாடசாலைகள் இன்று கிரிக்கெட் போட்டிகளை நடத்துவதில் பாரிய பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கின்றன. குறிப்பாக குறிப்பிட்ட வயதிற்கு மேற்பட்ட மாணவர்கள் நாட்டுச் சூழ்நிலை காரணமாக மாலை நேரங்களில் பயிற்சியில் ஈடுபடுவதைத் தவிர்த்து வருகின்றார்கள்.

13, 15 வயதுக்கு உட்பட்ட மாணவர்களைப் பொறுத்தவரையில் அவர்கள் பொதுப் பரீட்சைகளுக்கு தோற்றுவதில்லை என்றபடியால் முழுமையான பயிற்சிகளை வழங்கி நல்லமுறையில் அவர்களை வளர்த்தெடுக்கலாம்.

பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்துடன் இணைந்து சில செயற்பாடுகளை முன்னெடுப்பதன் மூலம் பாடசாலைகளில் கிரிக்கெட் வளர்ச்சிக்கு உதவுவதுடன் கழகங்களின் வளர்ச்சிக்கும் உதவமுடியும்.

எதிர்காலத்தில் கிரிக்கெட் சங்கம் கழகங்களுக்கு பயிற்சி முகாம்களை நடத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளவுள்ளது.

செவ்வி : நேசன்

இன்று உடனடியாக எதனையும் செய்துவிடக்கூடிய சூழ்நிலை காணப்படவில்லை. தற்போதைய நிலையில் எம்மிடம் இன்று உள்ள வளத்தைப் பயன்படுத்தியே பயிற்சி முகாம்களை நடத்தவேண்டியுள்ளது. குடாநாட்டுக்கு வெளியில் இருந்து பயிற்சியாளர்களைக் கொண்டுவருவது இப்போது சாத்தியமில்லாத விடயம். எனவே குடாநாட்டுக்கு வெளியே சென்று தென் பகுதியில் வழங்கப்படும் பயிற்சி முகாம்களில் எமது வீரர்கள், பயிற்சியாளர்கள் பங்குபற்றுவதற்கான வாய்ப்புக்களையும் எமது கிரிக்கெட் சங்கம் ஏற்படுத்திக் கொடுக்கவுள்ளது.

இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையுடன் தொடர்புகளை ஏற்படுத்தி எமது வீரர்களுக்கு வேண்டிய பயிற்சிகளையும் வேண்டிய வசதி வாய்ப்புக்களையும் பெற்றுக்கொடுப்பதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

கிரிக்கெட் உபகரணங்களைப் பெற்றுக் கொள்வதில் யாழ்ப்பாணத்தில் உள்ள கழகங்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ளன. இதனால் அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களின் மூலம் அவற்றைப் பெற்றுக்கொடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். சிறுவயதில் இருந்தே தொழில்நுட்ப அறிவுடன் கூடிய பயிற்சிகளை வழங்குவதன் மூலம் அவர்கள் எதிர்காலத்தில் தேசிய ரீதியில் பிரகாசிக்கும் வாய்ப்புகள் ஏற்படும்.

யாழ்ப்பாணத்தில் உள்ள பெரும்பாலான கழகங்களுக்கு விளையாட்டு மைதானங்கள் இல்லை. தற்போது மைதானங்களைக் கொண்ட கழகங்களாக வடமராட்சியில் கழுகுகள் விளையாட்டுக் கழகமும் வலிகாமத்தில் கிராம அபிவிருத்திச் சங்க விளையாட்டுக் கழகமுமே காணப்படுகின்றன. ஏனைய விளையாட்டுக் கழகங்கள் பாடசாலை மைதானங்களை நம்பியே செயற்பட்டுக்கொண்டு இருக்கின்றன. எனவே ஒரு பொதுக் கிரிக்கெட் மைதானம் மிகவும் அவசியம். இலங்கை கிரிக்கெட் சபை தென்னிலங்கையில் வழங்கும் உதவிகள் முழுமையாக யாழ். மாவட்டத்திற்கும் கிடைக்கவேண்டும். குறிப்பாக பொருளாதார மற்றும் உபகரண உதவிகள் இதில் அடங்கும்.

இலங்கை கிரிக்கெட் சபையுடனான தொடர்புகளும் வலுப்படுத்தப்படும்

எமக்கு தென்னிலங்கையுடனான தொடர்பு விடயத்தில் பாரிய பிரச்சினைகள் காணப்படுகின்றன. அதாவது போக்குவரத்து பிரச்சினை மற்றும் தொடர்பாடல் வசதிகள் எமக்கும் இலங்கை கிரிக்கெட் சபைக்கும் இடையில் பாரிய இடைவெளியை ஏற்படுத்தியுள்ளன. இத்தகைய துர்ப்பாக்கிய நிலை வடக்கு தவிர்ந்த ஏனைய மாவட்டங்களுக்கு இல்லை. எனினும் எமக்கு வேண்டிய உதவிகளைப் பெறுவதற்கு நாம் கிரிக்கெட் சபையுடனான தொடர்புகளை வலுப்படுத்தவுள்ளோம்.

தென்பகுதியைப் பொறுத்தவரையில் கிரிக்கெட் போட்டிகளுக்கும் கிரிக்கெட் வீரர்களின் வளர்ச்சிக்கும் பல்வேறு அனுசரணைகளை தொழில்நிறுவனங்களும் வர்த்தக நிறுவனங்களும் வழங்கி வருகின்றன. குடாநாட்டைப் பொறுத்தவரை அனுசரணையாளர்கள் என்ற விடயம் எதிர்மாறாகவே காணப்படுகின்றன.

எனவே இந்த அனுசரணையாளர்களையும் இனங்கண்டு தொடர்புகளை ஏற்படுத்தவும் முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

அத்துடன் யாழ். மாவட்டத்தில் சிறந்ததொரு கிரிக்கெட் அணியை உருவாக்கி பயிற்சிகளைத் தொடர்ந்து வழங்கவும் எமது சங்கம் தீர்மானித்துள்ளது. மாவட்ட மட்டத்தில் ஓர் அணியை தொடர் பயிற்சியில் வைத்திருப்பதன் மூலம் மாவட்ட அணிகளுக்கு இடையே நடைபெறும் போட்டிகளும் ஏனைய போட்டிகளுக்கும் பங்குகொள்ள அனுப்பிவைக்க முடியும். *

மாதகல் லூர்து அன்னை ஆலயத் திருவிழா இன்று

யாழ்ப்பாணம்,பெப்.16

மாதகல் புனித லூர்து அன்னை ஆலயத் திருவிழா இன்று சனிக்கிழமை ஆரம்பமாகின்றது.

இன்று பிற்பகல் 3.30 மணிக்கு நற்கருணை விழாவும் நாளை காலை 7.30 மணிக்குத் திருவிழாத் திருப்பலியும் நடைபெறவுள்ளன.

கடற்கரையில் அமைந்துள்ள இந்த ஆலயத்திற்கு வாகனங்கள், கைப்பைகள், கமெரா, கைத்தொலைபேசி என்பவற்றை எடுத்துச்செல்ல அனுமதி இல்லை என பங்குத்தந்தை அறிவித்துள்ளார். (202)

மன்னார், வவுனியா டாக்டர்களின் பணிப்பகிஷ்கரிப்பு முடிவுற்றது

மன்னார் மற்றும் வவுனியா வைத்தியசாலை வைத்தியர்கள் தமக்கு ஏற்படுத்தப்பட்டிருக்கும் கட்டுப்பாடுகளை தளர்த்தக் கோரி இரண்டாவது நாளாக வியாழக்கிழமை பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

மதவாச்சி சோதனைச் சாவடி ஊடாக வைத்தியர்கள் தமது சொந்த வாகனங்களில் செல்வதற்கு விதிக்கப்பட்டிருக்கும் கட்டுப்பாடுகளை தளர்த்தக் கோரியே வைத்தியர்கள் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர் என்று தெரி விக்கப்பட்டது.

இப்பிரச்சினைக்குத் தீர்வுகாணுமாறு கோரி கடந்த திங்கட்கிழமையும் மன்னார் மற்றும் வவுனியா வைத்தியசாலை வைத்தியர்கள் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டிருந்தனர்.

பணிப்பகிஷ்கரிப்புக் காரணமாக வைத்தியசாலைப் பணிகள் ஸ்தம்பிதம் அடைந்தன என்று அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

இதேவேளை, வைத்தியர்களுக்கான கட்டுப்பாடுகள் தளர்த்தப்படும் என வவுனியா படைத்தளபதி வழங்கிய உறுதிமொழியை அடுத்து சிலமணிநேரத்தில் பணிப்பகிஷ்கரிப்பை வைத்தியர்கள் கைவிட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. (சி)

தவறி வீழ்ந்ததில் கை முறிந்தது

யாழ்ப்பாணம், பெப்.16

வயல்களில் அறுவடை செய்த நெற்கதிர்களை சூடு மிதிக்கும் வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த நபர் ஒருவர் தவறி வீழ்ந்ததில் கை முறிந்தது.

இச் சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை மட்டுவில் வயல் பகுதியில் இடம்பெற்றது.

மட்டுவில் வடக்கைச் சேர்ந்த கதிரவேலு சிவராசா (வயது 46) என்பவரே கைமுறிந்த நிலையில் சாவகச்சேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டார். (202-207)

வாசகர் திருமுகம்

நிபுணர்கள் ஆராய்ந்து முடிவெடுக்கவேண்டும்

'பொறியியல் கற்கை நெறியும் எமது பிரதேச அபிவிருத்தியும்' சம்பந்தமாக அண்மையில் ஒரு நிகழ்வில் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை அவர்கள் தெரிவித்த கருத்து தொடர்பாக,-

எவ்வளவோ சிரமங்களுக்கு மத்தியில் பொறியியல் கற்கைநெறிக்குத் தெரிவு செய்யப்பட்டு கற்றுமுடித்து வெளியேறும் எமது பொறியியலாளர்கள் எதிர்நோக்குகின்ற தொழில் வாய்ப்புப் பிரச்சினை முக்கியமானது. அவர்களுடைய தகமையைப் பயன்படுத்தக் கூடிய விதத்திலான ஏற்பாடுகள் இனிமேல்தான் செய்யப்படவேண்டும் அதன் காரணமாகத் தான் முழு விருப்பமில்லாதவர்கள் கூட வெளிநாடு செல்கிறார்கள்.

குறிப்பிட்ட சில துறைகளுக்குத் தேவையான தகுதியுடன் பலர் பல்கலைக்கழகத்திலிருந்து வெளியேறாத நிலைமையும் உண்டு. திணைக்களங்களைத் தவிர தனியார் துறையில் அவர்களை ஈடுபடுத்துவதற்கு ஏற்கனவே உள்ள அமைப்பு முறைகளும் தகுதியானவர்களைக் கொண்டு தேவைகளை நிறைவேற்றவேண்டும் என்ற மனப்பான்மை பொதுவாகவே சமூகத்தில் காணப்படாமையும் முக்கிய காரணங்கள்.

இத்துறையில் உள்ள நிபுணர்கள் இது பற்றி ஆராய்ந்து முடிவெடுத்துச் செயற்படுத்தினால்தான் பேராசிரியர் அவர்களுடைய கருத்து பயனுள்ளதாக அமையும்.

கொக்குவில். [illegible]

சகோதரர் ஒன்றுபட்டு வாழ்வது எத்துணை நன்று, எத்துணை இனியது

எப்போதும் நல்ல உறவுகளைத் தேடவும் பகைமையை விலக்கவும் நாம் ஆண்டவர் இயேசுவால் அழைக்கப்படுகின்றோம். 'உங்கள் பகைவரை அன்பு செய்யுங்கள், உங்களை துன்புறுத்துவோருக்காக இறைவனிடம் வேண்டுங்கள்'' (மத். 5:44) பகைவரை அன்பு செய்ய அழைக்கப்படும் நாம், முதலில் மற்றவரை புரிந்துகொள்ளவும், மன்னிக்கவும் தெரிந்தால் பகைமை இல்லை என்பதை புரிந்து கொள்ளுவோம். துன்புறுத்துவோருக்காக இறைவனிடம் வேண்டுவது என்பது எமது நல் எண்ணங்களை எமக்குள் மறுக்காது மற்றவர் மட்டில் நல்லவற்றை விரும்ப, ஆசிக்க நாம் எம்மை இதப்படுத்திக் கொள்ள வேண்டும் என்கிறார் ஆண்டவர்.

எமது வாழ்வில் தெரிந்தோ தெரியாமலோ நாம் பகைவர்களாக மாறிவிடுகின்றோம், அல்லது எமக்கு பகைவர்கள் உருவாகிவிடுகின்றனர். பகைமையை ஏற்படுத்துவது ஒருவரின் அகநோக்கில் அடங்கி உள்ளது. ஒரு மனிதனுக்குள் அவரது ஆளுமை சீர்பெற்று உயரும் போது தனக்கு மிகக் கொடுமை செய்பவரைக் கூட மனிதனாக ஏற்கவே தூண்டுகின்றது. இவ்விதம் பண்படுத்தப்படும்போது ஒரு மனித உள்ளத்திற்குள் பகைமை இல்லை, பகைவர் இல்லை. அனைவரையும் அன்பு செய்யக் கற்றுக் கொண்டால் பகைமை என்பதே இல்லை. எனவேதான் ஆண்டவர் சொல்கிறார் உங்கள் பகைவர்களை அன்பு செய்யுங்கள் என.

* யாருடன் எமக்கு கசப்பான அனுபவங்கள் உண்டோ அவர்களுடன் எம் உள்ளத்தில் முதலில் சமாதானம் செய்து கொண்டு அவர்களிடத்தில் நல்ல வார்த்தைகளை இன்று பேசுவோம். அவர்களுக்கு நல்லது செய்யவும் நாம் முயற்சிப்போம்.

அருட்திரு மொன்சேர் CMF

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணீர் அஞ்சலி

யா/ கச்சாய் அ.த.க பாடசாலையின் உப அதிபர்
திருமதி சி.நவபாலன் அவர்களின் அன்புத் தாயார்
திருமதி **தவமணி சின்னத்தம்பி**
அவர்களின் பிரிவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்திபெறப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர், ஆசிரியர்கள், மாணவர்கள், கல்விசாரா ஊழியர்கள்.

ஆசிரியர் நலன்புரி ஒன்றியம்,
யா/ கச்சாய் அ.த.க. பாடசாலை,
கொடிகாமம். (71122)

கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் அதிபர்
திரு.பா.சிவராஜா
அவர்களின் பாசமிகு தாய்
பாலசிங்கம் தங்கரெத்தினம்
அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்.

யா/நாயன்மார்கட்டு,
மகேஸ்வரி வித்தியாசாலை,
நாயன்மார்கட்டு, யாழ்ப்பாணம். (71170)

கண்ணீர் அஞ்சலி

ச.சாமுவேல் இராஜரட்ணம்
[முன்னாள் கட்டட முகாமையாளர் - கரித்தாஸ் - சியூடெக், வன்னி]
எமது நிறுவனத்தில் கட்டட முகாமையாளராகக் கடந்த ஒரு வருடமாகப் பணியாற்றிய ச.சாமுவேல் இராஜரட்ணம் அவர்களின் மறைவையிட்டு அவரது குடும்பத்தினருக்கு எமது நிறுவனத்தின் சார்பில் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்தித்து நிற்கின்றோம்.

தகவல்: *இயக்குநர், ஊழியர்கள்,*
கரித்தாஸ் - சியூடெக், யாழ்ப்பாணம். *(71173)*

OBITUARY

Rajaratnam Sabaratnam Samuel
Retired Project Manager C.D.E., Cont. Prog. Manager Caritas – Hudec, Jaffna, Attached to Shakkane Eng (Pvt) Ltd. Negombo as Project Manager passed away on 14.02.2008. The youngest son of late Sabaratnam and Pathini- pillai, Beloved husband of Thevapushpam Rajaratnam, Formar Principal (Chundikuli Girls College, Jaffna). presently Principal Humedica International School, Manipay. Loving father of Sujieva and father – in – law of Vithyashangar and affectionate grand father of Samuel and Shemuel. Beloved brother of late Gunaratnam, Pushpam (Malaysia), late Ariyaratnam, Sugirtham (London), Thevy (London), Sornam (Vavuniya), Pavalam (Colombo).

The remains will be at 8 A 1/1, Station Road, Wellawatte on Friday 15th From 8 am to 8 pm and thereafter will be at Jayaratne funeral Parlour, Borella From Saturday 16th 8am till Sunday. Service at 4 pm followed by burial at kanatte cemetery at 4.30pm.

8A 1/1, Station Road, Wellawatte. Tel: 5750475

Mrs.T.Rajaratnam
Principal
Humedic International School Manipay.

(இ/551482)

ஈராண்டு நீங்காத நினைவலைகள்

அன்பின் இருப்பிடமாய், பண்பின் சிகரமாய்
குடும்பத்தின் ஒளி விளக்காய்
எம் குடும்பத்தை வாழ வைத்த அன்புத் தெய்வமே!
உங்கள் முகம் காணாது தவிக்கின்றோம்
அருகிலே நீங்களின்றி ஈராண்டு ஓடியதோ
இப்புவியில் நாங்கள் இருக்கும் வரை
உங்கள் நினைவுகள் மட்டும்- எம் நெஞ்சை விட்டு என்றுமே நீங்காது.

மனைவி, பிள்ளைகள்.

தொட்டிலடி, சங்கானை.

அமரர் இரத்தினம் வாமதேவன்

(கார் புறோக்கர்- சின்னத்தம்பி)

தோற்றம்: 07.10.1949 மறைவு: 23.02.2008

(இ/551481)

ஸ்ரீ ராம ஜெயம்

கமலக் கண்ணன் திருமண சேவை

61ஆம் ஆண்டு, செவ்வாய்க்குற்றம், 20 பாவமுடைய லண்டன், 75ஆம் ஆண்டு, செவ்வாய்க்குற்றமுள்ள, 30 பாவமடைய, லண்டன் 80ஆம் ஆண்டு செவ்வாய்க்குற்றமுள்ள, 112 பாவமுடைய, கனடா, 73ஆம் ஆண்டு செவ்வாய்க்குற்றமுள்ள, 35 பாவமுடைய கனடா மணமகன்களுக்கு அழகிய படித்த மணமகள்களும், 72 ஆம் ஆண்டு பாவம் குறைந்த டாக்டருக்கு டாக்டர் மணமகளும், 78 ஆம் ஆண்டு, 4இல் செவ்வாய், 60 பாவமுடைய B.Sc. மணமகனுக்கு படித்த அழகான மணமகளும் தேவை. டாக்டர்கள், எஞ்சினியர்கள், பட்டதாரி ஆசிரியர்கள், லிகிதர்கள், வெளிநாட்டில் பிரஜாவுரிமைபெற்ற மணமக்களும் மற்றும் வர்த்தகர்களும் ஏம்மிடமுள்ளன.

தொடர்பு: 171/7 மனோன்மணி அம்மன் வடக்கு வீதி, நல்லூர்.
தோ.பே 0776070862

காரைநகர் விநாயகர் ஆலயத்தில் கூட்டுப் பிரார்த்தனை நிகழ்வு

காரைநகர் மருதடி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் கூட்டுப்பிரார்த்தனை அங்குரார்ப்பண நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

காரைநகர் பிரதேச பிறப்பு, இறப்பு மற்றும் விவாகப் பதிவாளரும் ஆலய பொறுப்புரிமையாளர் சபைத் தலைவருமான கா. சோமசுந்தரம் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் காரைநகர் உதவி அரசாங்க அதிபர் த.ஜெயசீலன், காரைநகர் மணிவாசகர் சபைத் தலைவர் பண்டிதர் மு.சு. வேலாயுதபிள்ளை, பிரம்மஸ்ரீ சபாரத்தின ஈஸ்வரசர்மா ஆகியோர் சிறப்புரை நிகழ்த்தினர்.

இந்த கூட்டுப் பிரார்த்தனை ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் மாலை 5 மணிக்கு ஆலய மண்டபத்தில் ஓய்வுபெற்ற அதிபர் பண்டிதர் மு.சு.வேலாயுதபிள்ளை தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்த ஆலயத்தில் 1981 ஆம் ஆண்டு தொடக்கம் 1991 ஆம் ஆண்டு வரை தொடர்ச்சியாக கூட்டுப்பிரார்த்தனை இடம் பெற்று வந்தமை குறிப்பிடத்தக்கது.

(202-250)

கட்டாக்காலி நாய்களைக் கட்டுப்படுத்த நடவடிக்கை

யாழ்ப்பாணம், பெப்.16

கட்டாக்காலி நாய்களைக் கொலை செய்வதற்கு பதிலாக மாற்று உபாய முறைகளைக் கையாளுமாறு உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சின் செயலாளர் எச்.பி. கெஷியன் ஹேரத் சகல உள்ளூராட்சி சபைகளுக்கும் சுற்றறிக்கை மூலம் அறிவித்துள்ளார்.

உள்ளூராட்சி மன்றங்கள் விசர்நோயை ஒழிக்கும் பொருட்டு நோய் பரவியுள்ளதாக உறுதி செய்யப்படுகின்றதும் விலங்கு விசர் நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதாகச் சந்தேகிக்கப்படுகின்றதுமான நாய்களைத் தவிர்த்து பொதுவாக இடம்பெறுகின்ற நாய்கள் கொல்லப்படும் நடவடிக்கையை முற்றாக நிறுத்துமாறும் -

அதற்குப் பதிலாகப் பிரதேசத்தில் உள்ள சகல நாய்களுக்கும் முறையாக விலங்கு விசர் நோய் தடுப்பூசிகளைப் பெற்றுக் கொடுத்து நாய்களின் எண்ணிக்கையை கட்டுப்படுத்துவதற்குத் தொடர்ந்தும் இனப் பெருக்கத்தடைச் சிகிச்சையை மேற்கொள்ளுமாறும் - அறிவித்துள்ளார்.

(202-207)

ஸ்ரீ அம்மா பாதபூஜை

யாழ்ப்பாணம், பெப்.16

ஸ்ரீ அம்மா பகவானின் பாதபூஜை இன்று சனிக்கிழமை பி.ப. 3மணிக்கு சுழிபுரம் சந்திக்கு சமீபமாகவுள்ள சிவமங்கள இல்லத்தில் நடைபெறவுள்ளது.

(202)

சுழிபுரத்தில் எள் விதைப்பு

சுழிபுரம்,பெப்.16

சுழிபுரம், பொன்னாலை வயல்களில் நெல் அறுவடையை தொடர்ந்து எள்ளு, பயறு விதைப்பு நடைபெற்று வருகின்றது.

சென்ற வாரம் பெய்த போதிய மழையால் நிலம் ஈரலிப்பாகவுள்ளது.

நெல் விளைச்சல் அமோகமாக இருந்தது போல எள் விளைச்சலும் நன்றாக அமையும் என்று எதிர்பார்க்கப் படுகின்றது.

(202-28)

கண்ணீர் அஞ்சலி

அரியாலையூர் மக்களினால் 1919ஆம்ஆண்டு முதல் சித்திரைப் புத்தாண்டு தினத்தில் கொண்டாடப்பட்டு வரும் சுதேசிய திருநாள் கொண்டாட்ட விழாவின் 1977 ஆம் ஆண்டுக்கான தலைவராகவும் அதன் பின்னர் பல ஆண்டுகளாகச் செயற்குழு உறுப்பினராகவும் பதவி வகித்ததோடு தற்போது விழாவை நெறிப்படுத்தும் ஆலோசனைக் குழுவின் உறுப்பினராகவும் பதவி வகித்தவரும் விழாவன்று மேடையேற்றப்படும் பிரதான நாடகத்தில் பல ஆண்டுகளாகப் பல்வேறு பாத்திரங்களை ஏற்று நடித்து அரியாலையின் கலை வளர்ச்சிக்கு ஊன்றுகோலாக இருந்தவருமாகிய

சுப்பிரமணியம் பாலசுந்தரம் (இளைப்பாறிய தபாலதிபர்)

அவர்களின் திடீர் மறைவுக்காக அரியாலை மக்களின் சார்பில் விழாவின் நடப்பு வருட நிர்வாகம் கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றது.

அரியாலை சுதேசிய திருநாள் கொண்டாட்ட விழா -89ஆம் வருட நிர்வாகம் (2008).

மரண அறிவித்தல்கள்

தங்கரத்தினம் பாலசிங்கம்

நயினாதீவு,8ஆம் வட்டாரத்தை (மீனாட்சி அம்மன் கோயிலடி) பிறப்பிடமாகக் கொண்ட தங்கரத்தினம் பாலசிங்கம் 14.02.2008 வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் சின்னத்தம்பி பாலசிங்கத்தின் அன்பு மனைவியும் திரு.திருமதி நாகமுத்து தம்பதியரின் அன்பு மகளும் திரு. திருமதி சின்னத்தம்பி தம்பதியரின் மருமகளும் சிவராஜா, நேமிநாதன், கேதீஸ்வரி, நகுலேஸ்வரன், பாலமுரளி ஆகியோரின் பாசமிகு தாயும் மஞ்சுளா, வசந்தாதேவி, நேசராஜா, சுனித்தா, லோகவதனி ஆகியோரின் அன்பு மாமியும் ஹம்ஸா, தாரணி, பிரணவன், நிவேதா, நரேன், சுஜித்தா, சுமித்திரா, டிசாந், நர்மதா, தர்ஷன், யதுசன் ஆகியோரின் அன்புப் பேத்தியும் காலஞ்சென்றவர்களான பரமலிங்கம், திருநாவுக்கரசு, கண்மணி, இராசாம்பாள் ஆகியோரின் அருமைச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம், மருதப்பு, தில்லையம்பலம், வள்ளியம்மை ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

40/1, புது வீதி,
கொய்யாத்தோட்டம்,
யாழ்ப்பாணம். (71165)

தகவல்:
பா.சிவராஜா (மகன்),
(அதிபர், நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாலயம்).

அருளானந்தம் கிறிஸ்ரி

[பழைய மாணவர், யாழ்.பரியோவான் கல்லூரி, ஓய்வுபெற்ற எழுதுநர்- இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம்]

அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் ஏழாலையை வசிப்பிடமாகவும் கொண்ட அருளானந்தம் கிறிஸ்ரி (சிங்கம்) 14.02.2008 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பு அருளானந்தம்- மரியம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான யோசவ்-மரியம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் ஜெயராணியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற ஜெயராஜா மற்றும் துரைராஜா (லண்டன்), பொன்ராஜா (கனடா), செல்வராஜா (பிரான்ஸ்), காலஞ்சென்ற நவராஜா மற்றும் ஜோர்ச் (கொழும்பு), அன்ரனி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் தனஞ்செயன் (லண்டன்), தயாபரன் (ஆசிரியர், யாழ்.புனித பத்திரிசியார் கல்லூரி), வாசுகி (கொழும்பு), தயாளஜெயன் (ஆசிரியர், யா/ கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை), யசோதரா (எழுதுநர், பிரதேச செயலகம், தெல்லிப்பழை) ஆகியோரின் பாசமிகு தந்தையும் இன்பமலர் (லண்டன்), கிறேசியன் (கொழும்பு), ஞானசௌந்தரி, நர்மதா (ஆசிரியர், யா/கந்தரோடை, தமிழ்க் கந்தையா வித்தியாசாலை), மதிவதனன் ஆகியோரின் அன்பு மாமனும் பிரவீன், அடோனியா, அமிர்தா, ஆரணி, நிரூபன், ஜோயல், தாரணி, அரவிந்தன், ஓவியா ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனைகள் இன்று (16.02.2008) சனிக்கிழமை பி.ப. 3 மணிக்கு ஏழாலை புனித இசிதோர் ஆலயத்தில் நடைபெற்று, பூதவுடல் நல்லடக்கத்திற்காக ஏழாலை புனித இசிதோர் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

களபாவோடை,
ஏழாலை. (71173)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

மகாலிங்கம் மகேந்திரன்

மானிப்பாய், சுதுமலையைப் பிறப்பிடமாகவும் தற்போது கொழும்பு வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட மகாலிங்கம் மகேந்திரன் 15.02.2008 அன்று சிவபதமடைந்தார்.

அன்னார் ரசிசாந்தி அவர்களின் அன்புக் கணவரும் தபோதினி (Commercial Bank), தர்சினி (U.K.), லம்போதரன் (Peoples Bank) ஆகியோரின் தந்தையும் கஜரூபன், விநாயகன் ஆகியோரின் மாமனும் தனஞ்செயனின் பாட்டனும் நித்தியநந்தினி சிவகுருநாதன், கலாவதி மயில்வாகனம், ரவீந்திரன், சுரேந்திரன், வாசுகி சிவலிங்கம் ஆகியோரின் மைத்துனரும் திரு.திருமதி இராஜகுலசூரியர், Dr. திரு. திருமதி கணேஷமூர்த்தியின் சம்பந்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் Mahinda Parlour, Mount Lavinia இல் அஞ்சலிக்காக நேற்று 15.02.2008 பி.ப2 மணி முதல் வைக்கப்பட்டு நாளை (17.02.2008) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக கல்கிசை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

7 2/1, Collingwood Place,
Wellawatte.
T.P.:2362023. (71169)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்: 222 9944

கானல் நீருக்குக் காலக்கெடு

வாழ்வியலுக்கான நீதியும் நியாயமும் பலத்தை வைத்தே தீர்மானிக்கப்படுபவை என்ற உறுதியான கருத்து தென்னிலங்கையில் எப்போதுமே மேலோங்கி நிற்கின்றது.

அதன் அடிப்படையிலேயே தேசிய எண்ணிக்கை வீதத்தில் மிகச் சிறிய தொகையினரான தமிழ்பேசும் மக்களுக்குத் தொடர்ந்தும் நீதி மறுக்கப்பட்டு வருகின்றது, நியாயம் நிராகரிக்கப்பட்டு வருகின்றது.

ஜனநாயக ரீதியில் எண்ணிக்கைக் கணியங்களில் கணக்கெடுக்கும்போது இயல்பாகவே அதிக தொகையினரான பெரும்பான்மையினரின் ஆணையே - முடிவே - விருப்பே - செல்லுபடியாகும் என்ற கோட்பாட்டின் கீழ், சிங்களவர்களின் ஏக ஆதிக்கம் தமிழர்கள் மீது தொடர்ந்தும் சாதாரணமாகவே திணிக்கப்பட்டு வந்தது; திணிக்கப்பட்டு வருகின்றது.

இலங்கையின் ஆட்சி அதிகாரம் பௌத்த - சிங்களப் பேரினவாதிகளிடம் 1948 இல் உத்தியோகபூர்வமாக கைமாறியது முதல் கொண்டு, சிறுபான்மையினரான தமிழர்கள் அடக்குமுறைக்கும் எதேச்சாதிகார நெருக்குதலுக்கும் ஆளாக நேரிட்டமையும் -

அந்த அடக்குமுறைகளுக்கு எதிரான தமிழர்களின் சாத்வீக வழியிலான உரிமைப் போராட்டங்கள் பலாத்காரமாக - படைவலிமை மூலம் - அமுக்கி, அழிக்கப்பட்டமைக்கும் -

இந்த எண்ணிக்கைப் பலமே மூல காரணமும் முக்கிய வசதியுமாயிற்று.

ஜனநாயகத்தின் பெயரால் எண்ணிக்கைப் பலம் மூலம் மறுக்கப்பட்ட தமது நியாயமான உரிமைகளை எப்படியேனும் பெற்றுக்கொள்வதற்காகத் தமிழர்கள் ஆயுதம் தரித்த எதிர்ப்புரட்சி மூலம் மாற்றுவழி நாடியபோது, அதையும் இராணுவப் பலம் மூலம் அடக்கி, அழிக்க கங்கணம் கட்டி நிற்கிறது ஆட்சி அதிகாரம்.

அந்தத் தீர்மானம் தென்னிலங்கையில் நாளுக்கு நாள் உறுதியாகி, இறுகி வருவதை நாம் இப்போது அவதானிக்கின்றோம்.

ஆனால், இவ்வாறு தேசிய இனப்பிரச்சினைக்கு நீதியான தீர்வு வேண்டி - தமது வாழ்வியலுக்கான நியாயமான உரிமைகளை நாடி - தமிழர்கள் நடத்தும் அரசியல், இராணுவப் போராட்டத்தை படைபலம் கொண்டு நசுக்கி அழிக்கும் தென்னிலங்கையின் கதை கானல் நீராகக் கண்ணுக்குத் தோற்றித் தோற்றித் தள்ளிப் போவதையும் நாம் கடந்த முப்பது ஆண்டுகால சரித்திரமாக அவதானித்து வருகின்றோம்.

'வென்றுவா; அல்லது பூண்டோடு அழித்து வா!' - என்ற ஆணையோடு ஆறுமாதக் காலக்கெடு கொடுத்து தமது முன்னணிப் படைத் தளபதி பிரிகேடியர் வீரதுங்கவை 1979 ஜூலையில் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைத்தார் அப்போதைய நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்த்தனா.

1978 மே மாதத்தில் கொண்டு வரப்பட்ட - 'தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் மற்றும் அது போன்ற பிற இயக்கங்களைத் தடை செய்தல் (தற்காலிக ஏற்பாடுகள்) ' சட்டத்தை, 1979 ஜூலை 20 இல் 'பயங்கரவாதத் தடுப்பு (திருத்த)' சட்டமாக மாற்றியமைத்து, ஜூரி இல்லாத விசாரணை, கேட்டுக் கேள்வியில்லாத கைது, நீண்டகாலத் தடுத்து வைப்பு ஆகிய அதிகாரங்களை படைத்தரப்புக்கு வழங்கி, 'பயங்கரவாதத்தைப் பூண்டோடு அழித்து வாருங்கள்' என்ற பணிப்புரையோடு ஆறுமாதக் காலக்கெடு கொடுத்து, அனுப்பிவைத்தார் ஜயவர்த்தனா.

என்ன ஆயிற்று?

தமிழருக்கு எதிரான அரச பயங்கரவாதம் கொடூர - மிருகத்தன - வடிவமெடுத்து, தமிழரின் எதிர்ப் புரட்சியை - கிளர்ச்சியை - மேன்மேலும் தீவிரமடைய வைத்ததே தவிர அதைத் தணிக்கச் செய்யவில்லை.

இவ்விடயத்தில், ஜே.ஆர்.ஜயவர்த்தனா அன்று தொடங்கிய காலக்கெடு விதிக்கும் ஆட்சி அதிகார மமதைப் போக்கு, இன்றுவரை தொடர்கின்றது - அவ்வப்போது காலக்கெடு நீடிப்புகளுடன்.

யாழ்ப்பாணக் குடாநாட்டைக் கைப்பற்றியதும் -

'' இதோ முக்கால யுத்தம் முடிந்து விட்டது. எஞ்சிய கால்வாசி யுத்தமும் இந்தா முடியப்போகின்றது'' என்றும் -

''தொண்ணூற்று ஐந்து வீதப் புலிகளை அழித்து விட்டோம். எஞ்சிய ஐந்து வீதப் புலிகளும் கூண்டோடு விரைவில் அழிக்கப்படுவர்'' என்றும் -

செருக்கோடு 1996 இல் பிரகடனப்படுத்தினார் அன்றைய 'சப்புமல்குமரய' ஆன பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்தை.

அந்த எஞ்சிய கால்வாசி யுத்தம் இன்னும் - இப்போதும் - பன்னிரண்டு ஆண்டுகள் கடந்தும் - தொடர்கின்றது. அதுவும் அன்று எஞ்சி, மிஞ்சியிருந்த ஐந்து வீதப் புலிகளுடன் !

முன்னைய சிங்கள ஆட்சித் தலைமைகளுக்குத் தான் சிறிதும் வேறு பட்டதல்ல, அதே பௌத்த - சிங்கள ஆட்சியதிகார மமதைப் போக்குப் பண்பே உடையது என்பதை இப்போதைய ஆட்சித் தலைமையும் ஒழுங்காக நிரூபித்து வருகின்றது.

தேசிய இனப்பிரச்சினைக்கு நீதி, நியாயமான தீர்வு ஒன்றை முன்வைத்து, அதன் மூலம் சிறுபான்மையினரான தமிழர்களின் மனதை வென்று, நிரந்தரத் தீர்வு ஒன்றைக் காண்பதை விடுத்து, முன்னைய ஆட்சித் தலைமைகள் போல இதுவும் தனது படைபலத்தால் வென்று அடக்கு முறைத் தீர்வைத் திணிக்கக்கங்கணம் கட்டி நிற்கின்றது என்பது தெளிவாக வெளிப்படுகின்றது.

புலிகளை அழித்தொழித்து, 'பயங்கரவாதத்தை' பூண்டோடு களைதல் என்ற தேசியப் பிரகடனத்தை நிறைவு செய்வதற்கு குறுகிய காலக்கெடுக்களை விதித்து, அதை இப்போது மெல்ல, மெல்ல சற்றுப் பின்னோக்கி நகர்த்திவரும் கொழும்பின் போக்கு இதைத் தெட்டத் தெளிவாக வெளிப்படுத்துகின்றது.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, அவருக்கு அடுத்து அரசுக்குள் படைபல அதிகார செல்வாக்குடையவரான அவரது சகோதரரும் பாதுகாப்புச் செயலாளருமான கோத்தபாய ராஜபக்ஷ, இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சரத் பொன்சேகா ஆகியோர் இது தொடர்பில் வெளியிட்டு வரும் கருத்துகள் அவதானிக்கத்தக்கவை.

'வரும் ஓகஸ்ட்டுக்குள் புலிகள் கூண்டோடு காலி' - என்றார்கள். '2008 இல் தமது பிறந்த தினத்தை எதிர்கொள்ள புலிகளின் தலைவர் பிரபாகரன் இருக்க மாட்டார். இதுதான் அவரது கடைசிப் பிறந்த நாள்.' என்றார்கள். பின்னர் 'இவ்வருட இறுதிக்குள் புலிகள் முற்றாக அழிக்கப்படுவர்' என்று பிரகடனப்படுத்தினர். இப்போது 'புலிகளை ஒடுக்க இன்னும் ஒன்றரை வருடங்களாவது தேவை ' என்கின்றனர்.

அதற்குப் பின்னரும் சற்று நழுவல். 'இருபத்தியைந்து வருடம் நாசகார சக்தியாக வளர்ந்து விட்ட புலிகள் அமைப்பு போன்ற இயக்கத்தை முற்றாக அழிக்க இதுதான் திகதி என்று காலக்கெடு விதிக்க முடியாது. ஆனால் விரைவில் அவர்கள் இல்லாமல் செய்யப்பட்டு விடுவார்கள் ' - என இப்போது கதை மாறுகின்றது.

இப்படிக் காலக்கெடு விதித்தலும், அதை நீட்டலும் என்ற நம்பிக்கையை 'குதிரைக்கு முன்னால் கரட்டைக் கட்டித் தொங்க விட்ட மாதிரி' காட்டிக் கொண்டே தன்னுடைய ஆட்சி அதிகார நாட்களை இந்தத் தலைமையும் கொண்டிழுத்து விடும் போலவே தோன்றுகின்றது.

புலிகளை முற்றாக அழித்து, தமிழர்களின் கிளர்ச்சியை முளையோடு கிள்ளி எறிந்து, அதன் மூலம் இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வுகண்டு விடும் 'கானல் நீரை' தேடியபடி தென்னிலங்கை மக்களும் இந்த ஆட்சிக்குப் பின்னால் நம்பிக்கையோடு போக வேண்டியது தான்.

மின்கட்டண உயர்வை ஆட்சேபித்து நீதிமன்றில் வழக்குத் தொடரப்படும்

——ஐ.தே.கட்சி தரப்பில் தகவல்——

கொழும்பு,பெப்.16

மின்கட்டணத்தை அதிகரிக்கும் முயற்சியை அரசு கைவிடாவிடின், நீதிமன்றம் சென்று நியாயம் கேட்போம் - இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் தயா சிறி ஜயசேகர தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் வைத்தே தயாசிறி எம்.பி. இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது:

மின்சாரக் கட்டணங்களை அதிகரிக்கமாட்டோமெனப் பொறுப்பு வாய்ந்த அமைச்சர்கள் நாடாளுமன்றில் உறுதியளிக்கின்றனர். ஆனால், மார்ச் மாதம் தொடக்கம் மின்சாரக் கட்டணத்தை அதிகரிப்பதாக அறிவிக்கப்படுகின்றது. ஒருபுறம் அத்தியாவசியப் பொருள்களின் விலை அதிகரிப்பாலும் எரிபொருள்கள் விலை அதிகரிப்பாலும் எண்ணெய்யில் கொதிக்கும் நிலையிலுள்ள மக்கள் மீது இவர்கள் மின்சாரக் கட்டணத்தை அதிகரித்து மின்சாரத்தைப் பாய்ச்சுகின்றனர்.

இதுவரை காலமும் 30 அலகு மின்சாரப் பாவனைக்கு ரூபா 150 அறவிடப்பட்டது. புதிய கட்டண உயர்வினால் ரூபா 198 அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. மின்சாரக் கட்டணத்துடன் எரிபொருள் செலவுக் கட்டணமும் இணைத்துக் கொள்ளப்படுவதாலேயே வரலாற்றில் என்றும் இல்லாதவாறு நூற்றுக்கு 42 வீதம் மின்சாரக்கட்டணம் அதிகரிக்கப்படவுள்ளது.

மக்கள் மீது தொடர் சுமைகளை சுமத்துவதைப் பார்த்துக்கொண்டு சும்மா இருக்க முடியாது. எனவே நீதி மன்றம் சென்று நியாயம் கேட்போம் - இப்படி தயாசிறி ஜயசேகர கூறினார். (அ-2)

ஓய்வூதியரின் உயிர் வாழ்வுச் சான்றிதழை குறிப்பிட்ட திகதிக்குள் ஒப்படைக்க அறிவுறுத்து

நல்லூர், பெப்.16

ஓய்வூதியர்களின் உயிர்வாழ்வுச் சான்றிதழைக் கிராம அலுவலர்கள் ஒவ்வொரு வருடமும் டிசெம்பர் 31 ஆம் திகதிக்கு முன்னர் தத்தம் பிரிவு பிரதேச செயலர்களிடம் சமர்ப்பிக்க வேண்டுமென ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகம் கே.ஏ.திலகரத்ன அறிவுறுத்தியுள்ளார்.

சான்றிதழை சமர்ப்பிக்கும் பொறுப்பு உரியமுறையில் நிறைவேற்றப்படாவிடில் கிராம அலுவலர் தமது கடமையை நிறைவேற்றத் தவறியதாகக் கருதப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

சான்றிதழைப் பெறுவதற்கும் அதன்படி மேலும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் பிரதேச செயலர் ஏற்பாடு செய்யவேண்டும். அரசாங்க நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் அ.நி.க/1917 ஓய். 5.10.07 ஆம் திகதியிட்டனுப்பிய சுற்றறிக்கைக்கு அமைய கிராம அலுவலர்கள் நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்.

மரணித்தவர்களின் ஓய்வூதியம்/விதவைகள், அனாதைகள் ஓய்வூதியம் செலுத்துவதை நிறுத்தி விட்டு அதுபற்றி உடனடியாகக் கணனித் தரவுத் தளத்திலிருந்து நீக்குதல் தொடர்பாக ஓய்வூதியப் பணிப்பாளரின் ஆலோசனைப்படி செயற்படுதல் வேண்டும்.

புதிதாக விதவைகள், அனாதைகள் ஓய்வூதியம் செலுத்தும் அலுவல்களை ஆரம்பிக்கும் சந்தர்ப்பத்தில் அதற்கு அடிப்படையில் அமையும் மரணித்த ஓய்வு பெறுநரின் சகல தகவல்களும் தரவுத்தளத்தில் உள்ளடக்குதல் வேண்டும். அதன்படி உரிய ஆவணக் கடிதக் கோவைகளை நாள்தோறும் படுத்தல் வேண்டும் எனவும்-

ஓய்வூதியம் வழங்கும்போது ஓய்வூதியம் பெறுநரைச் சரியாக இனங்கண்டே ஓய்வூதியம் வழங்கப்படுதல் அவசியம் எனத் தபாலதிபர்களுக்கு அறிவிக்க வேண்டும். எவராவதொரு ஓய்வூதியம் பெறுநரின் அடையாளத்தை உறுதிசெய்ய முடியாத விடத்து கிராம சேவை அலுவலர் மூலம் அடையாளத்தை உறுதி செய்துகொள்ள நடவடிக்கை எடுத்தல் வேண்டுமென அறிவிப்பது அவசியம் எனவும் ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகம் அறிவித்துள்ளார். (202-111)

கலைமன்றங்களுக்கிடையில் பரதநாட்டியப் போட்டி

யாழ்ப்பாணம்,பெப்.16

வடமாகாணத்திலுள்ள கலைமன்றங்களுக்கிடையே பரதநாட்டியப் போட்டி நடத்தப்படவுள்ளது.

வடமாகாண கல்வி அமைச்சால் பிரதேச, மாவட்ட, மாகாண மட்டங்களில் இப்போட்டி நடத்தப்படவுள்ளது.

பங்குபற்ற விரும்பும் மன்றங்கள் விண்ணப்பங்களைத் தமது பகுதி கலாசார உத்தியோகத்தர் மூலம் பிரதேச செயலரின் சிபார்சுடன் எதிர்வரும் 29 ஆம் திகதிக்கு முன்னர் 'உதவிப் பணிப்பாளர், பண்பாட்டலுவல்கள் திணைக்களம், வடமாகாணம், வரோதய நகர், திருகோணமலை' என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (202)

பாடசாலைகளின் மெய்வன்மைப் போட்டிகள்

கரவெட்டி,பெப்.16

அல்வாய் ஸ்ரீலங்கா வித்தியாசாலையின் இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது.

அதிபர் செ.செல்வச்சந்திரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலய முகாமைத்துவ பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.புஸ்பலிங்கம் கலந்து கொள்வார். (202-70-218)

* * *

கரவெட்டி,பெப்.16

கட்டைவேலி, யார்க்கரு விநாயகர் வித்தியாலய இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் சோ.கருணேஸ்வரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதமவிருந்தினராகக் கரவெட்டிப் பிரதேச செயலர் சி.சத்தியசீலன் கலந்து கொள்வார். (202-70)

* * *

யாழ்ப்பாணம்,பெப்.16

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியின் இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு நவரத்தினராஜா விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

அதிபர் கே.ஆர்.ராஜசேகரம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கோப்பாய் பிரதேச செயலர் சீ.ஏ.மோகன்றாஸ் கலந்து கொள்வார். (202)

* * *

குருநகர்,பெப்.16

யாழ்.திருக்குடும்பக் கன்னியர் மடம் பாடசாலையின் இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 2.15 மணிக்கு யாழ்.சென்.பற்றிக்ஸ் கல்லூரி விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

யாழ்.மாவட்ட நீதிபதி இ.த.விக்கினராஜா, யாழ்.பல்கலைக்கழக ஆங்கிலப் பிரிவுத் தலைவர் திருமதி சாந்தி விக்கினராஜா ஆகியோர் பிரதம விருந்தினர்களாகவும், யாழ். புனித யாகப்பர் ஆலயப் பங்குத்தந்தை வண.பிதா ஆர்.எச். சகாயநாயகம் அடிகளார் கௌரவ விருந் தினராகவும் கலந்துகொள்வார். (202-51)

* * *

யாழ்ப்பாணம்,பெப்.16

நாவாந்துறை றோ.க.வித்தியாலயத்தின் இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று பிற்பகல் 1.30மணிக்கு நடைபெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் க.செபஸ்ரியாம்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக நாவாந்துறைப் பங்குத்தந்தை அருட்திரு. ரவிச்சந்திரன் அடிகளார் கலந்து கொள்வார். (202)

நாளை

மாசி - 05	17.02.2008 ஞாயிற்றுக்கிழமை
திதி : ஏகாதசி	பிற்பகல் 02.2-
நட்சத்திரம் :	திருவாதிரை முன்னிரவு 09.07
ஏகாதசி விரதம்	
நாள் நேரம்	08.33 - 1.33
[illegible]	05.03 - 08.33

மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம்,பெப்.16

மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையும் ஐ.எம்.எச்.ஓ.நிறுவனமும் இணைந்து நடத்தும் இலவச மருத்துவ முகாம் இன்று சனிக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 2.30 மணி வரை மூளாய் வீதி, வட்டுக்கோட்டையில் உள்ள கார்த்திகேய வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

வட்டுக்கோட்டை கண்ணகை அம்மன் ஆலயத்தினர் இந்நிகழ்வுக்கு அனுசரணை வழங்குகின்றனர். (202)

கிளிநொச்சியில் ஐ.நா.அபிவிருத்தி வேலைத்திட்டம் இடைநிறுத்தம்

வவுனியா,பெப்.16

கிளிநொச்சி மாவட்டத்தில் ஐ.நா. அபிவிருத்தித் திட்ட அமைப்பால் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்த வேலைத் திட்டங்கள் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

இது தொடர்பாகக் கிளிநொச்சி அரச அதிபருக்கு ஐ.நா.அபிவிருத்தித் திட்டம் அறிவித்துள்ளது. இதன்படி ஐ.நா.அபிவிருத்தித் திட்ட வேலைகள் அனைத்தும் கிளிநொச்சி மாவட்டத்தில் உடனடியாக நிறுத்தப்படுகின்றன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்புக் காரணங்களுக்காகவே ஐ.நா.அபிவிருத்திப் பணியாளர்கள் தமது வேலைத் திட்டங்களை இடைநிறுத்துகின்றனர் என்றும் கூறப்பட்டுள்ளது. (2)

வலிகாமம் வலயத்தில் இன்றும் நாளையும் சதுரங்கப் போட்டி

வலி.வடக்கு,பெப்.16

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையேயான ஆண்கள், பெண்களுக்கான சதுரங்கப் போட்டி இன்றும் நாளையும் மருதனார் மடம் இராமநாதன் கல்லூரியில் காலை 8 மணிமுதல் நடைபெறவுள்ளது.

15, 19 வயதுப் பிரிவினர்களுக்கான இப் போட்டியில் இன்று பெண்களுக்கான போட்டிகளும் நாளை ஞாயிற்றுக் கிழமை ஆண்களுக்கான போட்டிகளும் இடம்பெறவுள்ளன.

போட்டிகளில் கலந்துகொள்ளும் அணி ஒழுங்கு நிரல் தயாரித்தல், போட்டிகள் நடைபெறும் நாளில் இடம்பெறவுள்ளதால் போட்டிகளில் கலந்து கொள்ளும் பாடசாலைகளின் அணிகளைக் குறிப்பிட்ட நேரத்திற்குச் சமூகம் அளிக்கும்படி வலிகாமம் வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் மு.நடராசா கேட்டுள்ளார். (1-86)

கிராம சேவையாளர் பதவிக்கு நேர்முகப் பரீட்சை

யாழ்ப்பாணம், பெப்.16

கிராம சேவையாளருக்கான போட்டிப் பரீட்சைக்குத் தோற்றியவர்களுக்கான நேர்முகப் பரீட்சையை யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்கு யாழ். அரச அதிபர் கே. கணேஷ் நடவடிக்கை எடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளருடன் கலந்துரையாடியுள்ளார். இதனடிப்படையில் யாழ்ப்பாணத்திலும் நேர்முகப் பரீட்சையை நடத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

போட்டிப் பரீட்சையில் பெற்ற புள்ளின் விவரம் நேர்முகப் பரீட்சையின்போது வழங்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (50)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புங்குடுதீவைச் சேர்ந்த முன்பள்ளிச் சிறார்களுக்கு அருள்மிகு தெய்வக் குழந்தைகள் இல்லத்தின் சார்பில் சேமிப்புத் தொகையை வேலணை பிரதேச சபையின் புங்குடுதீவு உப அலுவலகப் பொறுப்பதிகாரி விஜயகுமார் வழங்குவதை முதலாவது படத்திலும் - நிகழ்வில் கலந்துகொண்ட பெற்றோர், முன்பள்ளி ஆசிரியர்கள், மாணவர்களை இரண்டாவது படத்திலும் காணலாம். *(படங்கள்: லக்ஸ்மன்)*

பசு மாட்டை இறைச்சிக்காக வெட்டிய நால்வருக்கு அபராதம் விதிப்பு

மேய்ச்சலுக்கு கட்டப்பட்டிருந்த பசு மாட்டைத் திருடி இறைச்சிக்காகக் கொலை செய்த நால்வருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் தலா 4ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. அத்துடன் நட்ட ஈடாக 20ஆயிரம் ரூபாவை மாட்டின் உரிமையாளருக்கு வழங்க வேண்டுமெனவும் உத்தரவிடப்பட்டது.

கடந்த ஓகஸ்ட் மாதம் சாவகச்சேரி நீதி மன்றுக்கு அருகில் உள்ள காணியில் பசு மாட்டை இறைச்சிக்காக வெட்டியபோது பொலிஸாரினால் இந்த நால்வரும் கையும் மெய்யுமாகப் பிடிக்கப்பட்டு நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டு பின்னர் பிணையில் விடு விக்கப்பட்டிருந்தனர்.

இவ்வழக்கு கடந்த செவ்வாய்க்கிழமை நீதிமன்றில் மீண்டும் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. மாட்டின் உரிமையாளரும் அதனைத் திருடியவர்களும் சமரசமாகச் செல்வதாகக் கூறியதையடுத்து மேற்படி தீர்ப்பு வழங்கப்பட்டது. (202-207)

புதிய கிளை நீரவனத்துடன் நாம்...!

COMPUTER EXPRESS

ஒருவாரகால முழுநேர கற்கைநெறிகள்

Jaffna Head office: No 15, Sirambiyadi Lane. (off Stanly Rd.) 021-222 8250, 0777 222422

Branch office: No 167, Kasthuriyar Rd, (Near Uthayan Publication) Jaffna.

Diploma in Hardware Engineering
❖ Assembling ❖ Upgrading ❖ Troubleshooting ❖ Fault Finding ❖ Repairing ❖ Servicing ❖ Software Installation ❖ Configuring ❖ Networking Etc..
Course Fee :2000/=

Diploma in Computerized Accounting
ACCPAC + Quick Books Premier + MYOB ஆகிய முன்னணி Accounting Software களினூடாக கற்பிக்கப்படும்.
Course Fee :3500/=

Diploma in Video Mixing
❖ Introduction to Computer ❖ Operating System(Win XP) ❖ Internet & email ❖ Adobe Photoshop ❖ Adobe Premier ❖ Cool3D Studio ❖ Pinnacle Studio ❖ VCD Cutter.
Course Fee :3000/=

Diploma in Graphic Designing
❖ Introduction to Computer ❖ Operating System(Win XP) ❖ Internet & email ❖ Adobe Photoshop ❖ Corel Draw ❖ Cool3D Studio ❖ Macro media Flash MX
Course Fee :2000/=

ஒரே நாளில் ஆரம்பம்:- 18/02/2008 09.00 AM

இறைச்சிக்கோழி விற்பனைக்கு

புறொயிலர், கல்பேட் இறைச்சிக்கோழி தினமும் சுத்தம்செய்து மிகக் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

நல்லூர் பாம் சென்டர்,
19, முருகேசர் லேன், நல்லூர். (71163)

விற்பனைக்கு

இரண்டு பெரிய ஆட்டுக்கடாக்கள் உடன் விற்பனைக்கு. தொடர்பு:
20, கொழும்புத்துறை வீதி, சுண்டுக்குளி. (71157)

WANTED

M.O/R.M.O for long term emloyment.

Apply
Director,
Central Nursing Home (Pvt.),
350, Palaly Road, Jaffna.

விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள இரண்டு கார்கள் உடன் விற்பனைக்கு. NISSAN SUNNY- NPHE XXXX தொடர் இலக்கமுடையது. TOYOTA COROLLA WP.JR XXXX தொடர் இலக்கமுடையது. தொடர்பு:
57, செம்பற்றிக்ஸ் றோட், யாழ்ப்பாணம்.
T.P.: 0776062569, 0214590175.

பாராட்டி வாழ்த்துகின்றோம்

அஞ்சல் சேவையில் 40 வருடங்கள் சேவையாற்றி அகவை 60இல் இன்று (16.02.2008) சனிக்கிழமை ஓய்வுபெற்றுச் செல்லும் உயர்திரு. முத்துக்குமாரு சிவதாசபிள்ளை அவர்கள் ஓய்வுகாலத்தில் தனது குடும்பத்துடன் மகிழ்வுடன் வாழ வாழ்த்துகின்றோம்.

பேரன்: தமிழன்,
பேரன்: வசந்த உதயன்,
பேரன்: உதயன்,
அரோஜ உதயன்.

அஞ்சல் சமூகத்தினர். (71146)

ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தானம்

ஏகாதசித் தீர்த்தம்

நாளை (17.02.2008) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00மணிக்கு அபிஷேகத்துடன் ஆரம்பமாகி 9.00 மணியளவில் சி.நவநீபன் (தொழில்நுட்பக்கல்லூரி, மாணவன்) அவர்களின் சொற்பொழிவும், 10.00 மணியளவில் வசந்தமண்டபப் பூஜையும் தொடர்ந்து தீர்த்தமும் இடம்பெறும்.

மங்களவாத்தியம் : கோண்டாவில் பாலமோகன் குழுவினர்

நாகேஸ்வரம் அளவெட்டி

நெஞ்சில் நீங்கா நினைவலைகள் - பத்தாம் ஆண்டு



அன்னைமடியில்
12☆01☆1922
14☆12☆1945
ஆண்டவன் அடியில்
16☆02☆1998
05☆02☆1998

அமரர்
பர்னாந்து அந்தோனிப்பிள்ளை

அமரர்
அந்தோனிப்பிள்ளை தேவதாஸ்

பொன்னின் புதையலே

அன்பெனும் தேன் வார்த்தே அரவணைத்தீர்!
ஆருயிராய் எமைக் காத்தீர் அருமைத் தந்தாய்!
துன்பமதே காணாது வளர்ந்தோம் ஐயா!
துடிதுடித்து மனம் பதறி சோகம் எழ
என்பினிலே இரத்தத்தில் அணுக்கள் ஊடே
இதயத்தின் நரம்பெல்லாம் பொங்கிப் பாயப்
பொன் புதையல் இழந்தவராய்த் துடிக்கின்றோமே
புனித முகம் இனியொரு நாள் பார்ப்போமா நாம்?

கற்பக நிழலே

பெற்றெடுத்த தாய்மடியை இழந்தே நாளும்
பெருக்கெடுத்த கண்ணீரில் மிதந்த காலம்
கற்பகப் பூஞ்சோலையென நிழல் சொரிந்தே
கட்டி அரவணைத்தவரே அப்பா! நாங்கள்
உற்ற துயர் மறந்தவராய் உங்கள் பாதம்
உறுதுணையென்றிருந்தோமே நெஞ்சம் வெந்தே!
பற்றியெரிந்திங்கே நாம் கலங்குகின்றோம்!
பால் வார்த்த தெய்வத்தைக் காண்பதெப்போ?

உங்கள் ஆத்மா சாந்தியடைய ஆண்டவரை வேண்டுகிறோம்.

10, மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணம். (71162)

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரனின் 45 ஆவது நாள் நினைவு நிகழ்வுகள் நேற்று பம்பலப்பிட்டி [illegible] மண்டபத்தில் இடம் பெற்றன.

இந்த நிகழ்வில் கலந்து கொண்ட கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன், ஐ.தே.கட்சி நாடாளு மன்ற உறுப்பினர் ரவிகருணநாயக்க மற்றும் பிரமுகர்களை முதலாவது படத்திலும், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இராசம்பந்தன், விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண ஆகியோர் உரையாற்றுவதை அடுத்துள்ள படங்களிலும் நிகழ்வில் கலந்து கொண்ட ஒரு பகுதியினரை கடைசிப் படத்திலும் காணலாம்.

காரணமற்ற இழப்புகளால் அதிகம் பாதிப்புறுவோர் தமிழரே;

துணிச்சலான தலைமைத்துவம் இன்றிச் சமாதானம் சாத்தியமில்லை

மகேஸ்வரனின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையில் சம்பந்தன்

கொழும்பு, பெப்.16

"இந்த நாட்டில் இடம்பெற்றுவரும் அவசியமற்ற இழப்புக்களை இல்லாமல் செய்து சமாதானத்தை நாம் ஏற்படுத்த முடியும். ஆனால் அரசியல் காரணங்களால் அந்த சமாதானத்தை எம்மால் ஏற்படுத்த முடியாமல் இருக்கிறது."

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்

"அத்தகைய சமாதானத்தை எட்டுவதற்கு துணிச்சல், நிதானம், நியாயமான முறையில் பிரச்சினைகளை அணுகுகின்ற தெளிவு, நேர்மையான செயற்பாடு ஆகியவற்றுடன் இயங்கும் அரசியல் தலைமைத்துவம் அவசியம். ஆனால் இத்தகைய அரசியல் தலைமைத்துவம் இந்நாட்டில் இல்லாததால் நீதியான அரசியல் தீர்வை நாம் எட்ட முடியவில்லை" - என்றும் சம்பந்தன் குறிப்பிட்டார்.

மறைந்த நாடாளுமன்ற உறுப்பினர் அமரர் தி.மகேஸ்வரனின் ஆத்மாசாந்திப்பிரார்த்தனையும், 'பாராளுமன்றத்தில் மகேஸ்வரன்' என்ற நினைவுமலர் வெளியீடும் நேற்று முற்பகல் பம்பலப்பிட்டி, புதிய கதிரேசன் மண்டபத்தில் இடம்பெற்றன. இதில் கலந்துகொண்டு புகழஞ்சலி செலுத்திய போதே இரா.சம்பந்தன் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில் கூறியவை வருமாறு:-

இன்று இங்கு இறப்பு சாதாரண விவகாரமாகி விட்டது. காரணமின்றியே இறக்கும் அவலத்தில் நாடு சிக்கியுள்ளது. இத்தகைய சாவுகளால் இன்று அதிகம் பாதிக்கப்படுபவர்கள் தமிழர்களே. ஏனையோரும் கூட இதனால் பாதிக்கப்படுகின்றனர்.

தேவையற்ற முறையில் இறப்பில் சிக்கிச் சமூகம் சீரழிவது யாருக்கும் நன்மை தராது.

இத்தகைய போக்குத் தொடர்ந்தால் இந்த நாடு அழிவது நிச்சயம்.

பொதுவாகவே இந்தச் சீரழிவுகளால் சாதாரண மக்களே பெரிதும் கொல்லப்படுகின்றார்கள். சிலர் குறிவைத்துத் தாக்கப்பட்டுக் கொல்லப்படுகின்றார்கள். விமானக் குண்டு வீச்சாலும் மக்கள் பெருமளவில் இறக்கின்றார்கள்.

அவசியமற்ற இழப்புக்களால் அழிவு

யுத்தம் காரணமாக போராளிகளும் இராணுவத்தினரும் கூட பெரும் எண்ணிக்கையில் இறக்கின்றார்கள்.

இந்த அவசியமற்ற இழப்புகளால் அழிவே தவிர வேறில்லை.

இந்த இழப்புகளை இல்லாமல் செய்து சமதானத்தை நாம் ஏற்படுத்த முடியும். ஆனால் அரசியல் காரணங்களால் அந்த சமாதானத்தை எம்மால் ஏற்படுத்த முடியாமல் இருக்கின்றது.

அத்தகைய சமாதானத்தை எட்டுவதற்கு துணிச்சல், நிதானம், நியாயமான முறையில் பிரச்சினைகளை அணுகுகின்ற தெளிவு, நேர்மையான செயற்பாடு ஆகியவற்றுடன் இயங்கும் அரசியல் தலைமைத்துவம் அவசியம். ஆனால் அத்தகைய அரசியல் தலைமைத்துவம் நாட்டில் இல்லாததால் நீதியான அரசியல் தீர்வை நாம் எட்ட முடியவில்லை.

குறிவைத்துக் கொன்றொழிக்கும் நடவடிக்கையின் கீழேயே மகேஸ்வரன் எம்.பியும் இலக்குவைத்து அழிக்கப்பட்டிருக்கின்றார்.

மகேஸ்வரன் எம்.பி. குறுகிய காலத்துக்குள் யாழ்ப்பாண மக்களாலும், கொழும்பு மக்களாலும் நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்ந் தெடுக்கப்பட்டிருக்கின்றார். இது, அவருக்கு மக்களின் அன்பும் ஆதரவும் அதிகம் இருந்தன என்பதை நிரூபிக்கின்றது.

மகேஸ்வரன் ஐக்கிய தேசியக் கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த போதிலும் தமிழ் உணர்வும், தமிழ் மக்கள் மீது நீங்காத பற்றும் கொண்டவராக விளங்கினார்.

உண்மைகளை துணிச்சலுடன் வெளிப்படுத்தினார்

தமிழர்களுக்கு எதிராக அடக்குமுறை கட்டவிழ்த்து விடப்பட்டபோது - யாழ். குடாநாட்டு மக்கள் அவலத்துக்கு உட்படுத்தப்பட்டபோது - கொல்லப்பட்டபோது - அவர் துணிவுடன் கொதித்தெழுந்து குரல் எழுப்பினார். உண்மைகளைத் துணிச்சலுடன் வெளிப்படுத்தினார்.

அவசரகாலச்சட்ட நீடிப்புப் பிரேரணைகளின்போது அவர் சார்ந்த ஐக்கிய தேசியக்கட்சி ஆதரித்தசமயம் - அல்லது வாக்களிப்பில் கலந்துகொள்ளாமல் ஒதுங்கிய சமயம் - அவர் மட்டும் தனியனாக அதனை எதிர்த்து நின்றார்.

தமிழ் மக்களின் கஷ்டங்கள், துன்பங்கள், யாழ். குடாநாட்டு மக்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்து விடப்பட்ட கொடூரங்கள் குறித்தெல்லாம் இறக்கும் முன்னரும் என்னுடன் அவர் பேசினார். இவற்றுக்குக் காரணமானவர்களை - பொறுப்பானவர்களை - நாடாளுமன்றத்தில் தாம் அம்பலப்படுத்தப் போகின்றார் என்று என்னிடமும் கூறினார்.

உண்மையை அம்பலப்படுத்துவது அரசின் கடமை;

உண்மை வெளியே அம்பலமாகிவிடும் என்பதன் நிமித்தமே - அது வெளியே தெரிந்து விடக்கூடாது என்பதற்காகவே - மகேஸ்வரன் குறிவைத்துக் கொல்லப்பட்டார் என்பதே தமிழ் மக்களின் கருத்து.

இதை - இந்தப் படுகொலையை - செய்தவர்களைக் கண்டறிந்து உண்மையை அம்பலப்படுத்துவது அரசின் கடமை; பொறுப்பு.

அது நடக்குமா என்பது சந்தேகமே. ஏனென்றால் அத்தகைய உண்மைகளை நேர்மையுடன் வெளிப்படுத்தும் துணிவோ, திராணியோ இந்த அரசுக்குக் கிடையவே கிடையாது.

மகேஸ்வரன் எம்பியின் மறைவு தமிழர்களுக்குப் பேரிழப்பு. தமிழ் பேசும் மக்களைப் பொறுத்தவரை இந்த இழப்பு இலகுவில் ஈடுசெய்யக் கூடிய விடயமே அல்ல. - என்று அவர் மேலும் கூறினார்.

நேற்றைய நிகழ்வில் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திஸ்ஸ விதாரண, ஐ.தே.கவின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க, தமிழ்த் தேசயக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் மற்றும் ஜனாதிபதியின் ஆலோசகர் ஏ.எச்.எம். அஸ்வர், சட்டத்தரணி நீலகண்டன், பொன். வல்லிபுரம் ஆகியோரும் நினைவுரையாற்றியிருந்தனர்.

நிகழ்வுக்கு கே. சுப்பிரமணியம் தலைமை வகித்தார்.

பெரும் எண்ணிக்கையில் பிரமுகர்களும் அனுதாபிகளும் இதில் கலந்துகொண்டார்கள்.

(சி)

முத்தரப்புத் தொடர்

சங்ககாரவின் போராட்டம் வீண்

63 ஓட்டங்களால் ஆஸி. வெற்றி

பேர்த், பெப். 16

ஆஸ்திரேலியாவில் நடைபெற்றுவரும் முத்தரப்புத் தொடரின் நேற்று நடந்த 6ஆவது போட்டியில் இலங்கை அணி ஆஸ்திரேலியாவிடம் போராடி 63 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியைத் தழுவியது. இலங்கை அணியின் போராட்டத்துக்கு வலுச் சேர்த்த சங்ககார 80 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தபோதும் அணியை வெற்றிக்கரை சேர்க்க அவரால் முடியவில்லை.

பேர்த் மைதானத்தில் நடந்த இந்தப் போட்டியில் 237 ஓட்டங்கள் என்ற இலக்கைக் கலைத்த இலங்கை அணிக்கு ஆரம்ப வீரர்கள் உரிய அடித்தளத்தை அமைத்துக் கொடுக்கத் தவறினர். ஆரம்ப வீரர்களான டில்சான் 11 ஓட்டங்களுடன் ஜோன்ஸனின் வேகத்திலும், ஜெயசூரியா 12 ஓட்டங்களுடன் பிரக்கனின் வேகத்திலும் ஆட்டமிழந்தனர்.

தொடர்ந்து களமிறங்கிய சங்ககார சிறப்பாக ஆடி ஓட்டங்களைச் சேர்த்தார். இவருக்கு ஒத்துழைப்பு அளிக்க மறுமுனையில் வந்த வீரர்கள் தவறினர். மஹேல 21 ஓட்டங்களுடனும், கப்புகெதர 26 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர். மற்றைய வீரர்கள் இரட்டை இலக்க ஓட்ட எண்ணிக்கையை தொட முன் விக்கெட்டைப் பறிகொடுத்தனர்.

அபார ஆட்டத்தை வெளிப்படுத்திய சங்ககார கடைசி விக்கெட்டாக பிரட் லீயின் வேகத்தில் 'போல்ட்' ஆக இலங்கை அணியின் இன்னிங்ஸ் 45.3 ஓவர்களில் 173 ஓட்டங்களுடன் முடிவுக்கு வந்தது. கடைசிவரை போராடிய சங்ககார 114 பந்துகளில் 4 பவுண்டரிகளுடன் 80 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார். ஆஸியின் பந்துவீச்சில் பிரக்கன், ஜோன்ஸன் ஆகியோர் தலா 3 விக்கெட்டுகளையும் பிரட் ஹொக் 2 விக்கெட்டையும், பிரட் லீ, ஜேம்ஸ் ஹோப்ஸ் ஆகியோர் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

முன்னதாக, நாணயச் சுழற்சியில் வென்று முதலில் ஆடிய ஆஸ்திரேலிய அணி கில்கிறிஸ்ற்றின் 'பொறுமையான' சதத்தின் உதவியுடன் 49.4 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 236 ஓட்டங்களைப் பெற்றது. ஆரம்பவீரரான மத்தியூ ஹைடன் வெறும் 4 ஓட்டங்களுடன் மலிங்கவின் வேகத்தில் ஆட்டமிழந்தார். தொடர்ந்து வந்த பொண்டிங் 25 ஓட்டங்களுடன் வாஸிடம் விக்கெட்டை பறிகொடுத்தார்.

தொடர்ந்து இணைந்த கில்கிறிஸ்ற் - மைக்கல் கிளார்க் ஜோடி அணியைத் தூக்கி நிறுத்தியது. தனது சொந்த மைதானத்தில் கடைசியாக விளையாடும் கில்கிறிஸ்ற், மிகவும் நிதானமாக ஆடினார். எனினும், அடிக்க வேண்டிய பந்துகளை சிக்ஸர், பவுண்டரியாக மாற்றவும் அவர் தவறவில்லை. மறுமுனையில் சிறப்பாக ஆடிய மைக்கல் கிளார்க் 43 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் முரளியின் சுழலில் வெளியேறினார்.

தொடர்ந்து வந்த வீரர்கள் எவரும் பெரிதாகச் சோபிக்கவில்லை. ஹசே மாத்திரம் 25 ஓட்டங்களை எடுத்தார். மற்றைய எவரும் இரட்டை இலக்க ஓட்ட எண்ணிக்கையைத் தாண்டவில்லை. ஒருமுனையில் சிறப்பாக ஆடிய கில்கிறிஸ்ற் ஒருநாள் போட்டிகளில் 16ஆவது சதத்தை நிறைவு செய்தார். அவர் 132 பந்துகளில் 3 சிக்ஸர்கள், 9 பவுண்டரிகளுடன் 118 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்து ஆட்டமிழந்தார்.

இலங்கையின் பந்துவீச்சில் மலிங்க 47 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து 4 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார். குலசேகர 2 விக்கெட்டுகளையும், வாஸ், மஹ்ரூப், முரளிதரன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

போட்டியின் ஆட்டநாயகனாக கில்கிறிஸ் தெரிவுசெய்யப்பட்டார்.

யாழ்ப்பாணத்திலும் நினைவு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,பெப், 16

கடந்த மாதம் முதலாம் திகதி படுகொலை செய்யப்பட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரனின் 45 ஆவது நினைவு நாளை ஒட்டி நேற்று நல்லூர் தூக்காமணி மண்டபத்தில் விஷேட பிரார்த்தனை நிகழ்வுகள் இடம்பெற்றன.

குருமார்கள், சமயப்பெரியார்கள், வர்த்தகப் பிரமுகர்கள் என நூற்றுக்கணக்கானவர்கள் இந்த நிகழ்வில் பங்குபற்றினர்.

மகேஸ்வரனின் நினைவு மலரும் வெளியிட்டு வைக்கப்பட்டது.

அவரது பிறந்த ஊரான காரைநகரிலும் நேற்று முன்தினம் விசேட நிகழ்வுகள் இடம்பெற்றன.

காரைநகர் சிவன் ஆலயத்தில் விசேட பூசைகள், அஞ்சலி நிகழ்வுகள் இடம் பெற்றன.

(1)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

1988 – 89 இல் அம்பாந்தோட்டைக் கடல் பகுதியில் புலிகளிடம் ஆயுதங்கள் பெற்றனர் ஜே.வி.பியினர்

நீதிமன்றத்தில் குட்டை உடைத்தார் முன்னாள் இராணுவ ஜெனரல்

கொழும்பு, பெப். 16

"1988-89 ஆம் ஆண்டு காலப் பகுதியில் ஜே.வி.பி. பயங்கரவாதிகள் அம்பாந்தோட்டை கடல் பகுதியில் வைத்து விடுதலைப் புலிகளிடம் ஆயுதங்களைப் பெற்று பரிமாற்றத்தில் ஈடுபட்டனர். அப்போது காலி இராணுவ இணைப்பதிகாரியாக இருந்த எனக்கு அது குறித்து நடவடிக்கை எடுக்கும்படி அரசால் அறிவிக்கப்பட்டது. நான் உரிய நடவடிக்கைகளை எடுத்தேன். அதனால் என்மீது கறுவிக்கொண்டுள்ள ஜே.வி.பி. பிரமுகர் விமல் வீரவன்ஸ எனக்கு எதிராக அபாண்டக் குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி பொய்ப்பிரசாரம் செய்து வருகிறார்"

-இவ்வாறு நீதிமன்றத்தில் சாட்சியமளித்திருக்கிறார் ஓய்வுபெற்ற இராணுவ மேஜர் ஜெனரல் வசந்த பெரேரா.

ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளரும் எம்.பியுமான விமல் வீரவன்ஸவுக்கு எதிராக ஐந்து கோடி ரூபா நஷ்டஈடு கோரித் தாம் தாக்கல் செய்த வழக்கு ஒன்று தொடர்பாகக் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் சாட்சியமளித்தபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டிருக்கிறார்.

இந்த வழக்கு விசாரணை கடந்த வாரம் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் நீதிபதி சிஸிர ரத்நாயக்கா முன்னிலையில் இடம்பெற்றது.

கனகராயன் குளத்தில் உள்ள இராணுவ முகாம் புலிகளினால் தாக்கப்பட்டபோது அந்த முகாமின் பொறுப்பதிகாரியாக இருந்த தாம், அங்கிருந்த பல கோடி ரூபா ஆயுதங்களை அப்படியே போட்டு விட்டுத் தப்பி ஓடினார் எனத் தெரிவித்து 2004 ஆம் ஆண்டு பெப்ரவரி 9ஆம் திகதி தேசிய தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் தம் மீது அபாண்டமான குற்றத்தைச் சுமத்தி தமது பெயருக்குக் களங்கம் விளைவித்திருக்கிறார் விமல் வீரவன்ஸ என இந்த வழக்கில் மனுதாரர் குற்றம் சுமத்தியிருக்கிறார்.

தமது சாட்சியத்திலும் மனுவிலும் மேஜர் ஜெனரல் வசந்த பெரேரா மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஜே.வி.பியினரின் பயங்கரவாத நடவடிக்கைகளை நான் ஒடுக்கியதால் என்மீது அவர்களுக்குக் கோபம். அதனால்தான் எனக்கு எதிராக அவ்வாறு தொலைக்காட்சியில் பொய்ப்பிரசாரம் செய்யப்பட்டது.

அச்சமயம், நான் இராணுவ சேவையிலிருந்து ஓய்வுபெற்று முதலீட்டுச் சபையில் நிர்வாகத்துக்குப் பொறுப்பான பிரதி ஆளுநர் நாயகமாகப் பதவி வகித்துவந்தேன்.

நெல்லியடி முகாமுக்குப் பொறுப்பாக இருந்தவர்

ஆனால் ஜே.வி.பியினரின் அந்தப் பிரசாரம் காரணமாக அச்சமயம் முதலீட்டுச் சபைக்குப் பொறுப்பாக இருந்த அமைச்சர் அனுரா பண்டாரநாயக்கா என்னை அப்பதவியிலிருந்து நீக்கினார். அதனால் நான் வருமானத்தையும் இழந்தேன்.

1987 இல் நெல்லியடி முகாமுக்கு நான் பொறுப்பாக இருந்த சமயமே அதன்மீது முதன்முதலாகப் புலிகள் தற்கொலைத் தாக்குதலை நடத்தினர். நான் அதிலும் உயிர் தப்பினேன்.

நாட்டுக்காக சேவைசெய்து இராணுவத்தில் 'ரணவிக்ரம', 'ரணசூர' பதக்கங்களைப் பெற்ற எனக்கு ஜே.வி.பியின் விமல் வீரவன்ஸ அவப்பெயரை ஏற்படுத்தி களங்கம் கற்பித்துள்ளார். அத்துடன், எனக்கு வருமான இழப்பும் ஏற்படுத்தியுள்ளார்.

- இந்தச் சாரப்படி சாட்சியமளித்தார் ஜெனரல் வசந்த பெரேரா. (சி)

வடக்கு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார்.

ஆனந்தசங்கரியை வடக்கு ஆளுநராக நியமிக்க நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன என்று கூறப்படுகின்றமை தொடர்பாக அவரிடம் கருத்துக் கேட்டபோதே அவர் இவ்வாறு நேற்றுச் உதயனுக்குப் பதிலளித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு:-

இனப்பிரச்சினைக்கான தீர்வாக 13 ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்குரிய ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கும் இச்சந்தர்ப்பத்தில் வடக்கிற்கு ஆளுநர் ஒரு வரை நியமிப்பது பற்றியும் பேசப்படுகின்றது.

என்னையே ஆளுநராக நியமிக்க நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன என்று ஊடகங்களில் கூறப்படுகின்றது.

இதுபற்றிய உண்மை நிலை எதுவும் எனக்குத் தெரியாது. ஊடகங்கள் வாயிலாகத் தான் நானும் அறிகிறேன்.

வடக்கின் ஆளுநர் பதவியை ஏற்குமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஒன்பது மாதங்களுக்கு முன் என்னிடம் கேட்டிருந்தார். அப்போது நான் எந்தப் பதிலையும் கூறவில்லை.

இப்போது இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு யோசனையாக சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழு முன்வைத்திருக்கும் யோசனையின்படி வடக்கில் இடைக்கால நிர்வாகசபை ஒன்றை அமைக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இச்சந்தர்ப்பத்தில் ஆளுநர் ஒருவரையும் நியமிக்க நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன என்று அறிகிறேன்.

ஆனால் என்னையே ஆளுநராக நியமிக்க நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன என்று கூறப்படுகின்றமை தொடர்பில் எனக்கு எதுவும் தெரியாது.

இது தொடர்பாக நான் இதுவரை எந்த முடிவும் எடுக்கவுமில்லை. அத்தோடு இந்த விடயம் தொடர்பாக நான் மேலும் கருத்துக்கூற விரும்பவில்லை. - என்றார் அவர். (சி)

13ஆவது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசு நடவடிக்கையில் இறங்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அமைச்சர் ராஜித சேனாரத்னவே இத்த கவலை நேற்று வெளியிட்டார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய சமயமே அவர் இதனைக் கூறினார். இது தொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு:-

தேசிய பிரச்சினை இரண்டு தசாப்தங்களையும் தாண்டித் தொடர்கிறது. நாடு அழிவை நோக்கியே சென்றுகொண்டிருந்தது.

இவ்வாறானதொரு மோசமான சூழ்நிலையில்தான் மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாகத் தெரிவாகி இந்நாட்டு நிர்வாகத்தைக் கையேற்றார்.

அவர் வந்த வேகத்தில் தேசிய பிரச்சினையைத் தீர்ப்பதற்கு கடும் முயற்சிகளை மேற்கொண்டார். இந்த விடயத்தில் பெறப்படமுடியாமல் இருந்த தென்னிலங்கையின் இணக்கப்பாட்டையும் பெற்றுவிட அவர் பாடுபட்டார்.

இந்தப் 13 ஆவது திருத்தச்சட்டம் மிக விரைவில் நடைமுறைப்படுத்தப்படும். அதில் எந்தத் தடையும் கிடையாது.

இது நடைமுறைப்படுத்தப்பட்டு மிகக் குறுகிய காலத்திற்குள் 13 ஆவது திருத்தச்சட்டத்திற்கு அப்பால் சென்றும் தீர்வை முன்வைக்க அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

ஐக்கிய தேசியக் கட்சி - ஜனநாயகக் குழு என்ற அடிப்படையில் 13 ஆவது திருத்தச்சட்டத்திற்கு அப்பால் சென்று நடைமுறைப்படுத்தக்கூடிய தீர்வு யோசனைகளை நாம் சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவின் முன்வைப்போம்.

தற்போது நடைமுறைப்படுத்தப்படவிருக்கும் அரசமைப்பின் 13 ஆவது திருத்தச்சட்ட யோசனையானது எமது கட்சியின் சார்பில் நாம் சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவுக்கு முன்வைத்த யோசனையே என்பது குறிப்பிடத்தக்கது. - என்றார். (அ - சி).

ஐ.தே.க., ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

"ஆகவே, அத்தகைய திட்டங்களைத் தயாரித்துத், தூக்கிப் பிடித்து அரசுத் தலைமைக்குத் தேவையற்ற தொல்லைகளை சம்பாதித்துக் கொடுக்காதீர்கள்.

"சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவின் இறுதி யோசனை என்ற பெயரில் எதையாவது முன்வைப்பதாயின் அதனுள் ஐ.தே.க. மற்றும் ஜே.வி.பியின் கருத்துகளையும் உள்ளடக்கச் செய்யுங்கள். அப்படியில்லாமல் வேறு எதையும் தீர்வு யோசனை என்று கொண்டுவராதீர்கள்.

"ஐ.தே.கட்சியை இவ்விடயத்துக்குள் உள்ளீர்ப்பதற்கான முயற்சியில் ஜனாதிபதி தாமே நேரடியாக ஈடுபட்டுள்ளார். இது குறித்துப் பேசுவதற்கு வருமாறு அவர் எதிர்க்கட்சித் தலைவரும், ஐ.தே.க.தலைவருமான ரணில் விக்கிரமசிங்கவுக்கு அழைப்பு விடுக்கவுள்ளார். இதற்கான நடவடிக்கைகளை ஜனாதிபதியின் செயலாளர் முன்னெடுப்பார்.

"ஆகவே, ஐ.தே.கட்சி இம்முயற்சிக்குள் உள்ளெடுக்கப்படுவதற்கான வாய்ப்புகள் உள்ளன.

"அதேபோன்று ஜே.வி.பியையும் அரவணைத்து ஒரு தீர்வு யோசனையை உருவாக்க முயலுங்கள். அது குறித்து ஜே.வி.பியுடன் தொடர்பாடலை வையுங்கள்.

"அதைவிடுத்து - இக்கட்சிகளை ஓரங்கட்டி - அரசுத் தரப்புக் கட்சிகளை மாத்திரம் ஒன்றிணைத்து - யோசனைத் திட்டம் ஒன்றை தென்னிலங்கையின் இணக்கப்பாடாகக் காட்டிக் கொண்டு முன்வைத்துக் குழப்பாதீர்கள்"

- இவ்வாறு விதாரண அறிவுறுத்தப்பட்டிருக்கின்றார் என்று அறியவருகின்றது.

இந்தப் பின்னணியில், சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவுக்குள் இந்த இரு கட்சிகளையும் மீண்டும் இழுப்பதற்கான புதிய முயற்சிகள் விரைவில் அரசுத் தரப்பால் ஆரம்பிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (உ)

சகல இன .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மக்களை ஒன்றிணைக்கும் சமஷ்டி முறையே அமுலில் உள்ளது. அவ்வாறான ஒன்றை ஜே.வி.பி. ஏற்கும் என ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ஸ அமரசிங்க தெரிவித்தார்.

கடந்த செவ்வாய்க்கிழமை இலங்கை வர்த்தக சம்மேளனத்தில் தலைவர் மஹேன் தயானந்த தலைமையிலான குழு பெலவத்தையில் உள்ள ஜே.வி.பி. தலைமையகத்தில் அதன் தலைவர் சோமவன்ஸ அமரசிங்கவைச் சந்தித்துப் பேச்ச நடத்தியபோதே அவர் இதனைத் தெரிவித்தார் எனக் கூறப்படுகிறது.

இந்நிகழ்வில் ஜே.வி.பி. எம்.பிக்களான விஜித ஹேரத், விமல் ரத்னாயக்க ஆகியோரும் கலந்து கொண்டனர். சர்வகட்சி பிரதிநிதிகள் குழு முன்வைத்துள்ள யோசனைகளை ஜே.வி.பி. ஏன் எதிர்க்கின்றதென இலங்கை வர்த்தக சம்மேளனப் பிரதிநிதிகள் வினவியபோது அதற்குப் பதிலளித்த சோமவன்ஸ அமரசிங்க. முதலிடம் தேசிய பாதுகாப்பிற்கே வழங்கப்படவேண்டும். அதற்குப் பிற்பாடே மற்றெல்லாம். பயங்கரவாதப் பிரச்சினை இருக்கும்போது அதிகாரத்தைப் பரவலாக்குவதால் பயங்கரவாதமே பலம் பெறும்.

அதேநேரம் நாட்டில் வாழும் அனைத்து இனங்களையும் ஒன்றிணைத்து ஒரு திசையை நோக்கிவழி நடத்திச் செல்லக்கூடிய சமஷ்டி முறையை ஜே.வி.பி. ஆதரிக்கிறது. இவ்வாறான முறையே அமெரிக்காவிலும் சுவிட்ஸர்லாந்திலும் நடைமுறையில் உள்ளது. நிர்வாகத்தை கிராமத்திற்கு கிராமம் மட்டுமல்ல, வீதிக்கு வீதி பரவலாக்கினாலும் அதனை நாம் முழுமையாக ஆதரிப்போம்.

செயலிழந்து போயுள்ள அரசமைப்புச்சபையை மீண்டும் செயல் திறன்மிக்கதாக்க ஜே.வி.பி. ஏன் ஜனாதிபதிக்கு அழுத்தம் கொடுக்கக்கூடாது என வர்த்தக சம்மேளனத்தினரால் வினாவப்பட்ட கேள்விக்கு சோமவன்ஸ அமரசிங்க பதிலளிக்கையில் கூறியவை வருமாறு:-

நாட்டில் யுத்தம் இடம்பெற்று வரும் சூழ்நிலையில் ஜனநாயகத்தை பாதுகாப்பதற்கான நிறுவனங்களை பலப்படுத்தல், செயல்திறன்மிக்கதாக மாற்றுதல் அத்தியாவசியமானதாகும். எனவே, அரசமைப்புச் சபை தொடர்பாகக் கட்சியின் அடுத்த அரசியல் சபைக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டு தீர்மானம் எடுக்கப்படும் என்று தெரிவித்தார். (சி)

கொழும்புச் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிட்ட ஆயுதக்குழுவுக்கு எதிராக இருக்கின்றன என்று குற்றம் சுமத்தியே அக்குழு அந்த அச்சுறுத்தலை விடுத்திருக்கின்றது.

அந்த ஆயுதக்குழு அன்ஸீரை மிரட்டி கடந்த செவ்வாய்க்கிழமை தினக்குரல் அலுவலகத்துக்கு கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளது என்று தெரியவருகின்றது. (சி)

தரம் 5
2008 புலமைப் பரிசில் பயிற்சிப் பரீட்சை
வெற்றி இலக்கு - 2
19-02-2008
பாடசாலைகளில் நடைபெறும் வினாத்தாள்களுக்கு பதிவு செய்யப்படும் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் உடன் தொடர்புகொள்ளவும்
தயா அச்சகம்
138, நாவலர் றோட், (நாவலர் பாடசாலைக்கு முன்பாக), யாழ்ப்பாணம்.

தரம்: 5 புலமைப் பரிசில்
வெற்றித்தேர்வு திருமலை S.கணேசலிங்கம் அவர்களின்
வெற்றித்தேர்வு வினாத்தாள்: 123456
இயல்வாழும் சகல புத்தகசாலைகளிலும்
AKV தொலைத் தொடர்பகம் கஸ்தூரியார் வீதி(யாழ் இந்துக்கல்லூரி அருகில்)
வெற்றித்தேர்வு 6 மாவட்ட ரீதியிலான பரீட்சை
பொருத்தமான நேரத்தில் எத்தனை வெளிமாணவர்களும் தோற்றலாம்.
நாளை ஞாயிறு
6am, 8am, 10am, 2pm, 4pm
கட்டணம் ரூபா:30மட்டும்
பரீட்சை நடைபெறும் இடங்கள்.
நல்லூர் சயன்ஸ் அக்கடமி
நல்லூர் முருகன் கோவில் முன்பாக
பிறைற்மன் கல்வி நிறுவனம்,
நல்லூர் பிள்ளையார் கோவில் முன்பாக

காணி விற்பனைக்கு
சிவன் கோயிலடி, தும்பளை வீதியில் 3/4 பரப்பு காணியுடன் கட்டிய குறையில் வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு:- கு. நந்தகுமாரன்,
தும்பளை வீதி, பருத்தித்துறை.
தொலைபேசி: 0773[illegible]
2263664

சுடர் ஒளி
THE SUDAR OLI
பெப். 10 - 16 2008
பல அரசியல் கட்டுரைகளுடனும் வழமையான சுவையான அம்சங்களுடனும் இன்று விற்பனையில் உள்ளது.
உங்கள் உதயன் விநியோகஸ்தர்களிடம் கேட்டுவாங்குங்கள்!

கணினி வாங்கப் போகிறீர்களா?
ஒரு நிமிடம்!!
பின்பு கவலைப்பட தேவையில்லை
தரமான உதிரிகள்!
குறைந்த விலை!
நீடித்த உழைப்பு!
நீடித்த ஆயுள்!
Contact US

Unipro	UniDual	UniCore
Intel P4. 3.0/2m,	Intel Dual 3.0/4m	Intel C2D 2.2/2m,
Intel 945 MB	Intel 945 MB	Intel 945 MB
512Mb DDR2	1 Gb DDR2	1 Gb DDR2
80Gb Sata HDD,	80Gb Sata HDD,	160Gb Sata HDD,
Combo	DVD-RW	DVD-RW
15" SS/VS Monitor	15" LCD Monitor	17" LCD Monitor
Keyboard	Keyboard	Keyboard
Mouse	Mouse	Mouse
Speaker	Speaker	Speaker
UPS	UPS	UPS

Printers
Laser
Dot Matrix
InkJet
Woofers
Creative, MicroLab
UNIT
மனோகரா பற்றி
347, K.K.S Road, Jaffna
4590720,0773134737

மரண அறிவித்தல்கள்

திருமதி செல்வநாயகி அம்பலவாணர்

வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் சிட்னி, ஆஸ்திரேலியாவில் வசித்தவருமான திருமதி செல்வநாயகி அம்பலவாணர் 14.02.2008 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அருளம்பலம் அம்பலவாணர் (Retired Tug - Master, Colombo Port Commission) அவர்களின் அன்பு மனைவியும், சாம்பவமூர்த்தி (லண்டன்), இராஜசேகரம் (ஆஸ்திரேலியா), இராஜநாயகி (நியூஸிலாந்து), விமலா (ஆஸ்திரேலியா), சுகுமார் (லண்டன்), மோகன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தாயாரும் நெலியா (லண்டன்), சுந்தரேஸ்வரி (ஆஸ்திரேலியா), கோகுலு (நியூஸிலாந்து), மூர்த்தி (ஆஸ்திரேலியா), சியாமளா (லண்டன்), பாலா (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமியாரும் சமந்தா, நைஜல், சியாமளா, துவாரகா, கிருஸ் ணன், பிரியங்கா, கஜந்தன், கோபிகா, நவீன், யுகன், நிதர்ஷா, பிரணவன் ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 18.02.2008 திங்கட்கிழமை (சிட்னி நகரில்) ஆஸ்ரேலியாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக் கொள்ளவும்.

சிட்னி - T.P.No. 0061297022048

தகவல்:
குடும்ப நண்பர்:
ந.சிவரத்தினம்,
இலங்கைவங்கி பிரிந்திய
காரியாலயம், யாழ்ப்பாணம்.
தெ.பே.இல.021 222 3126

தகவல்:
குடும்ப உறவினர்:
மீனாட்சிசுந்தரம்,
சிவன்கோவிலடி,
வல்வெட்டித்துறை.

(சி/551496)

கனகசபை துரையப்பா

அரசடி வீதி, வடலியடைப்பைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கனகசபை துரையப்பா நேற்று (15.02.2008) வெள்ளியன்று இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கனகசபை - தெய்வானைப் பிள்ளை தம்பதியினரின் மகனும், கண்மணியின் கணவரும், மகேஸ்வரன், சாந்தகுமாரன், சற்குணநாதன், யோகமலர், புவனேஸ்வரன் ஆகியோரின் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.02.2008) சனிக்கிழமை ந.ப. 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் விளாவெளி இந்து மயானத்தில் தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
அரசடி வீதி,
வடலியடைப்பு.
தா.சாந்தகுமாரன்
(மகன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 16.02.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.